*2*

# கொலோசெயருக்காக பவுல் நன்றி செலுத்துதல்

# (1:3–8)

*வாழ்த்துரையைத் தொடர்ந்து, கொலோசெயரின் விசுவாசம், அன்பு, மற்றும் நம்பிக்கை ஆகியவைகளினிமித்தம் பவுல் அவர்களுக்காக தனது நன்றியறிதலின் ஜெபத்தை அவர்களுக்குத் தெரியப்பண்ணினார். சுவிசேஷத்தின் சத்தியத்தை அறிந்து கொண்டு, அவர்கள் இயேசுவுக்காக கனிகொடுக்கத் துவங்கினார்கள். தொடர்ந்து கனி கொடுத்தார்கள். எப்பாப்பிரா, கிறிஸ்துவினிமித்தம் பவுலின் உடன் வேலைக்காரன், அவர்களுக்குப் போதித்திருந்தான், பவுலுக்கும் அவர்களைக் குறித்துத் தெரிவித்திருந்தான்.*

*வசனங்கள் 4 முதல் 8ல் பவுல் செலுத்தின நன்றிகள் வரிசைப்படுத்தப் பட்டுள்ளது. அவர் தனது வாழ்த்துரையைத் தொடங்கின போது, தனது நிருபங்களில் சிறப்பியல்பாக ஸ்தோத்திரங்களையும் நன்றிகளையும் குறிப்பிட்டு பின்பு அவர்களுடைய தனிப் பண்பை அல்லது கிரியைகளை அவர் விமர்சித்து எழுதினார். அவைகள் சில வேளைகளில் கடிந்து கொள்ளுதலையும் கண்டனம் பண்ணுதலையும், உபதேசங்களையும் கொண்டவைகளாக வாசகர்களை பக்திவிருத்திக்கேதுவானவர்களாக்கக் கூடியவைகளாக இருந்தன.*

## அவர்களுடைய விசுவாசமும் அன்பும் (1:3)

**3கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான்களெல்லாம் மேலுமுள்ள உங்கள் அன்பையுங்குறித்து நாங்கள் கேள்விப்பட்டு.**

***"கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தைக் ... குறித்து நாங்கள் கேள்விப்பட்டு" (1:3)***

*வினைச் சொல்லாகிய **கேள்விப்பட்டு** (akousantes) எனும் வார்த்தை அடிக்கடி புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. அது கிரேக்க மொழியில் ஒரு கடந்த கால முற்றுவினையாக "ஸ்தோத்திரஞ் செலுத்துதலுடன்" வசனம் 5ல் துணை வினைச் சொல்லாகக் காணப்படுகிறது.[1] இந்த "கேள்விப்பட்டு" என்ற செயல் ஸ்தோத்திரஞ் செலுத்துவதற்கு முன் நடந்தது. இதே கிரேக்க அமைப்புச் சொல் மாற்கு 16:16ல், காணப்படுகிறது, அங்கே "விசுவாசமுள்ளவனாகி" "ஞானஸ்நானம் பெற்றவன்" எனும் சொற்கள் ஒரு கடந்த கால முற்று வினையில் பேசுகிறது மேலும் கடந்த கால எச்ச வினையாகவும்*

பேசுகிறது. இதன் பொருள் "முதன்மையான வினைச் சொல்லாகிய," "இரட்சிக்கப்படுவார்கள்" என்பதற்கு முந்திய செயல் இது.

பவுலும் தீமோத்தேயும் கொலோசெயர்களின் வாழ்வு நிலை குறித்து எப்பாப்பிரா மூலமாகவும், ஒரு வேளை மற்றவர்கள் மூலமாகவும் கேள்விப்பட்டிருக்கலாம். பவுல் பல வித்தியாசப்பட்ட உள்ளூர் சபைகளின் நல்ல நடத்தைகளையும், கெட்ட நடக்கைகளையும், உள்ளூர் சபைசம்பந்தப்பட்ட பிரச்சனைகளையும், மற்றும் கள்ள உபதேசங்களையும் குறித்து கேள்விப்பட்டார். சிலவேளைகளில் யார்மூலம் அந்தச் செய்திகளைக் கேள்விப்பட்டார் என்பதையும் குறிப்பிட்டு, குலோவியாளின் வீட்டார் மூலமாக கொரிந்தியர்களைக் குறித்து கேள்விப்பட்டதை எழுதினார் (1 கொரிந்தியர் 1:11). உள்ளூர் சபைகளுக்குள் இருந்த சூழ்நிலைகளை சிலவேளைகளில் ஆவியானவரும் அவருக்கு வெளிப்படுத்தினார் (1 கொரிந்தியர் 5:3; கொலோசெயர் 2:5). சிலவேளைகளில் அவர் அறிவிக்கப்பட்டிருப்பார் ஆனால் யார் மூலம் என்று சொல்லியிருக்க மாட்டார் (1 கொரிந்தியர் 5:1; 1 தெசலோனிக்கேயர் 1:9).

சபைகளிலிருந்து வருகிற செய்திகளுக்கு (அல்லது புகார்களுக்கு) பவுல் பொதுவாக பதிலளிப்பார். பிலிப்பியரில் பவுல் எயோதிகேயாள் மற்றும் சிந்திக்கேயாள் ஆகியோருடைய பெயரைக் குறிப்பிட்டு, அவர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துப் போகாதிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு - அது நிவர்த்தி செய்யப்பட வேண்டிய ஒரு பிரச்சனையாகக் குறிப்பிட்டார் (பிலிப்பியர் 4:2). 2 தீமோத்தேயு 2:16-18ல் இமெநேயும் பிலேத்தும், எப்படிப்பட்டவைகளுக்கு எச்சரிக்கப்பட வேண்டியவர்கள் என்று குறிப்பிட்டார். 2 தீமோத்தேயு 4:10ல் பவுலைவிட்டு பிரிந்து சென்ற தேமாவின், பெயர் சொல்லப்பட்டது. அவர்களுடைய கவனத்திற்கு பவுல் கொண்டு சென்ற நோக்கம் இரண்டு பெண்களின் ஒத்துப் போகாத தன்மையை சரிசெய்ய உதவுவதும், இரண்டு கள்ள போதகர்களுக்கு எதிரான எச்சரிக்கை கொடுக்கும் படியாகவும், விசுவாசத்தை விட்டு விலகிப் போன ஒரு சகோதரனைக் குறித்து அறிவிக்கும்படியாகவுமே எழுதினார்.

ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசாதபடிக்கு யாக்கோபு எழுதினார் (யாக்கோபு 4:11) அல்லது ஒருவருக்கொருவர் முறையிடாதிருக்கும்படி குறிப்பிட்டார் (யாக்கோபு 5:9). தவறாக வாழும் கிறிஸ்தவர்களையும் சபைகளையும் குறித்து புகார் அளிப்பது வேலையற்றவர்களின் புறங்கூறுதலா? புறங்கூறுதல் - ஒரு நல்ல நோக்கமில்லாமல் மற்றவர்களுடைய காரியங்களில் தலையிடுவது - மற்ற தீமையான செயல்களோடு பட்டியிலிடப்பட்டதும் கடிந்து கொள்ளப்பட்டதுமான செயல் (ரோமர் 1:29; 2 கொரிந்தியர் 12:20; 1 தீமோத்தேயு 5:13; 2 தீமோத்தேயு 3:3; தீத்து 2:3). ஜனங்களைப் பற்றி இந்த விதமாகப் பேசுதல் மற்றவர்களின் காரியத்தில் தலையிடுவதிலிருந்து வித்தியாசப்பட்டது அல்லது ஒரு பிரச்சனைக் குறித்து விவாதித்து அதற்கு நிவாரணத்தைத் தேடும் முயற்சியாக இருக்கிறது.

கொலோசெயர் சகோதரர்களையும் சகோதரிகளையும் குறித்து பவுல் பெற்ற செய்தி நல்லவைகளாகவே இருந்தன. மற்றவர்கள் அவர்களுடைய விசுவாசத்தைக் குறித்து, விசுவாசத்தில் கிறிஸ்துவுக்கு உண்மையாயிருப்பதைக் குறித்து பேசினார்கள். அவர்கள் மத்தேயு 5:14ஆ வில் இயேசு

*விவரித்தவர்களைப் போன்றவர்கள்: "மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது." அனைத்துக் கிறிஸ்தவர்களின் நோக்கமும் மற்றவர்கள் அவர்களைக் குறித்து கேள்விப்பட்டு தங்கள் விசுவாசத்திலே ஊக்கப்படத் தக்க வகையில் வாழ வேண்டியவர்கள்.*

*வசனங்கள் 3, 4ல் பவுல் ஒரு தனிசிறப்புமிக்க ஒன்றுக்கொன்று தொடர்புடைய மூன்று வார்த்தைகளை சேர்த்திருக்கிறார்: "விசுவாசம்," "அன்பு," "நம்பிக்கை." புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் அவைகளை அடிக்கடி ஒன்றிணைத்துக் காட்டியிருக்கிறார்கள்.*[2] J. B. Lightfoot *பவுல் இந்த மூன்று வார்த்தைகளை உட்படுத்தியிருப்பதை சாராம்ஸமாக்கிப் பேசியிருப்பதாவது:*

> கிறிஸ்து இயேசுவுக்குள் நீங்கள் கொண்டிருக்கிற *விசுவாசம்* தேவனுடைய எல்லா ஜனங்களுக்கும் காட்டுகிற *அன்பு*, வருகிற மறுமை வாழ்க்கைக்கென உங்களுக்கென்று நீங்கள் பரலோகத்திலே சேர்த்து வைத்திருக்கிற பொக்கிஷத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டுள்ள *நம்பிக்கையும்* கண்டு நாங்கள் நன்றியுணர்வால் நிறைந்திருக்கிறோம்.[3]

***கிறிஸ்து இயேசுவிலுள்ள விசுவாசம்*** *எனும் பொருளைக்குறித்து இந்தப் பகுதியில் விளக்கவுரையாளர்கள் அவரவர் அர்த்தங்களில் விடாப்பிடியாக இருக்கின்றனர். வித்தியாசப்பட்ட சிந்தனைக் கருத்துக்களை பின்வரும் வரிகளில் காணுங்கள். முதலாவதாக,* Herbert M. Carson *எழுதினது:*

> *கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள* என்று இந்த வசனப் பகுதியில் கூறியிருக்கும் சொற்றொடர் கிறிஸ்துவை இலக்காக வைத்து பேசுவதாகப் பொருள்படாது, இது உண்மையேயானாலும், அதற்கு *இஸ்* அல்லது *எபி* எனும் சொல் வந்திருக்க வேண்டும். நாம் ஏற்கனவே வசனம் 2ல் பார்த்தபடி, அது பவுலின் சிறப்பு வார்த்தையாக அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் *கிறிஸ்துவுக்குள் இருக்கிறார்கள்* என்பது தங்களுடைய ஜீவனை பெறுகிற பொருளில் கூறப்படுகிறது ... இப்படியாக அவர்கள் வெளிப்படுத்துகிற விசுவாசம் கிறிஸ்துவோடே கூட அவர்கள் கொண்டிருக்கும் தொடர்பின் முக்கியத்துவத்தைப் பெறுகிறது. அவரோடு அவர்கள் கொண்டிருக்கிற ஐக்கியத்தின் கட்டுப்பாட்டில் அவர்களுடைய விசுவாசம் இருக்கிறது.[4]

*லைட்ஃபூட் இந்த முடிவில் ஒத்துப்போகிறார்:*

> இங்கே குறிப்பிடப்பிடப்படுகிற *என்* (*யென்*) எனும் முன்னிடைச் சொல், இதற்குச் சமமான வசனப்பகுதியான, எபேசியர் 1:15, அவர்களுடைய விசுவாசம் இயக்கம் பெறுகிற ரீதியைக் குறிப்பிடுகிறது, அது சுட்டிக்காட்டுகிற இலக்குக்குப் பதிலாக இதுதான் உண்மை (1 கொரிந்தியர் 3:5); இலக்கை பொருட்படுத்தியிருக்குமானால், இயல்பான முன்னிடைச் சொல் *எபி* அல்லது *இஸ்* ஆகத்தான் இருக்க வேண்டும் (உதாரணம் 2:5).[5]

F. F. Bruce *சற்று இலோசான வித்தியாசத்தைக் காட்டுகிறார்:*

> "கிறிஸ்து இயேசு" என்னும் வார்த்தை இங்கே காணுப்படுவதை அவர்களின் விசுவாசத்தின் இலக்கு எனும் கோணத்தில் அதிகப்பட்சமாக பார்க்க

முடியாது; அதற்கு மாறாக அப்போஸ்தலன் பேசும் கோணம் ஆணும் பெண்ணுமாக கொண்டுள்ள விசுவாசம் "கிறிஸ்து இயேசுவுக்குள்" இருப்பதைக் குறித்து பேசுகிறார்.[6]

A. T. ராபர்ட்ஸன் மற்றொரு கோணத்தைப் பயன்படுத்தி சொல்லுகிறார், "அவர்களுடைய விசுவாசம் கிறிஸ்து இயேசுவுக்குள் இயக்குகிறது (2 தீமோத்தேயு 1:13). அது மெய்யான பற்றுதலைக் காட்டிலும் அதிகமானது; அது கிறிஸ்துவுக்குள்ளான நம்பிக்கை ..."[7]

சுருக்கமாக, "கிறிஸ்து இயேசுவுக்குள்" எனும் சொல் வழக்கமாக இயேசுவோடு கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கிற உறவுமுறை பவுலால் விவரிக்கப்படுகிறது. சொற்றொடர் அவருடன் கொண்டுள்ள நெருக்கமான ஐக்கியத்தையும் அவர் கொடுக்கும் ஆசீர்வாதத்தையும் ஆலோசனையாகச் சொல்லுகிறது. இந்த வசனப்பகுதியில் பவுல் ஒருவேளை அவர்கள் கொண்டுள்ள விசுவாசம் கிறிஸ்துவுக்குள்ளானது என்ற பொருளில் எழுதியிருக்கமாட்டார். அவர் இலக்கு மரபு முறை (பயனிலை) பயன்படுத்தி, மற்ற வசனப்பகுதிகளில் குறிப்பிடுவது போல, "கிறிஸ்துவில் விசுவாசம்" என்று பொருள்படுத்த வில்லை. அந்தச் சொற்றொடரின்படி, குறிப்பிடப்பட்ட விசுவாசம் கிறிஸ்துவில் வைக்கிற விசுவாசம். மாற்றாக, கிறிஸ்துவுக்குள் கொலோசெயர்கள் தங்களுடைய விசுவாசத்தை பயிற்சிவிக்கிறார்கள் என்று அவர் அர்த்தப்படுத்தினார். அவர் அவர்களுடைய விசுவாசத்தை கேள்விப்பட்டார், அந்த விசுவாசம் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களிடம் நிலைத்திருந்தது, இதற்கு அவர் நன்றியுள்ளவராக ஸ்தோத்திரஞ் செலுத்துகிறார் (வசனம் 5).

### "பரிசுத்தவான்களெல்லார் மேலுமுள்ள அன்பு" (வசனம் 3)

பவுல் முதலாவதாக கொலோசெயரின் விசுவாசத்தைக் குறிப்பிட்டார், பிறகு அவர்களுடைய அன்பைக் குறிப்பிடுகிறார். விசுவாசம்தான் கிறிஸ்தவனின் அனைத்து ஒழுக்கங்களுக்கும் அஸ்திபாரமானது (2 பேதுரு 1:5-7) உண்மையான விசுவாசம் தன்னைப் போன்ற விசுவாசமுள்ளவர்களை அன்பு காட்டச் செய்கிறது. இயேசுவைப் பின்பற்றிப் போகிறவர்கள் ஒருவருக்கொருவர் தங்களை தனிமைப்படுத்திக் கொள்வதைக் காட்டிலும், விசுவாசம் நம்முடைய உடன் கிறிஸ்தவர்களை அன்பினால் எட்டச் செய்கிறது.

**அன்பு** மட்டுப்படுத்தப்பட்ட ஒன்று அல்ல; அது **எல்லா பரிசுத்தவான்களையும்** சூழ்ந்து கொண்டுள்ளது. அது சபைக்குள்ளாக விசேஷித்த எந்தக் குழுவையும் சபைக்குள் உருவாக்குவதில்லை. இயேசுவினால் அறிமுகமாக்கப்பட்ட அன்பு, இனம், தேசம், சமுதாய ஸ்தானம், பாலினம், மற்றும் சொத்துகளின் மேன்மை ஆகிய எல்லாவற்றையும் கடந்து நிற்கக் கூடியது. தேவன் உலகிற்குக் காட்டும் அன்பு (யோவான் 3:16) மனித பின்னனியினால் எந்த வேறுபாட்டையும் கொண்டிருப்பதில்லை. அன்பின் தேவனாக இருப்பதால் ஒரு நபர் நேசிக்கத்தக்கவன் எனும் அடிப்படையில் தேவனுடைய அன்பு செயல்படுவதில்லை (ரோமர் 5:7, 8; 1 யோவான் 4:8). கிறிஸ்தவர்கள் அதே போன்ற அன்பைக் கொண்டிருக்க வேண்டியவர்கள். மற்றவர்கள் நேசிக்கப் படத்தக்கவர்களோ இல்லையோ, நாம் மற்றவர்களிடத்தில் அன்புகூரத்தான் வேண்டும். இப்படிப்பட்ட தன்மை

*கொண்ட அன்பு மூலம், நாம் கிறிஸ்தவர்கள் என்பதை வெளிப்படுத்தி, இயேசுவின் மெய்யான சீஷர்களாக விளங்கப் பண்ணுகிறோம் (யோவான் 13:35).*

*கொலோசெயரின் கிறிஸ்துவுக்குள்ளான அன்பிற்கு பவுல் நன்றி செலுத்துகிறார். கிறிஸ்தவ நன்னடத்தைகளிலேயே "அன்பு" தான் (அகாபே) மகா பெரிது. அன்பே விசுவாசத்தைக் காட்டிலும், நம்பிக்கையைக் காட்டிலும் மகா பெரியது (1 கொரிந்தியர் 13:13). அவருடைய சீஷர்கள் என்பதை மற்றவர்கள் அவர்களின் அன்பினாலே மட்டுமே அடையாளங் காணப்படுவார்கள் என்று இயேசு சொன்னார். எல்லாவற்றிலும் மேலாக, அன்புதான் கிறிஸ்தவ ஜீவியத்தில் சேர்க்கப்பட வேண்டியது என்று பவுலும் பேதுருவும் குறிப்பிட்டனர் (கொலோசெயர் 3:14; 1 பேதுரு 4:8). கிறிஸ்தவ வளர்ச்சிப் பட்டியலில், அன்பை முன்பதாகக் குறிப்பிட்டு, ஒரு கிரீடத்தை அடைந்தாற் போல் பேதுரு காட்டினார் (2 பேதுரு 1:7).*

*"சகல பரிசுத்தவான்கள்," எனும் சொற்றொடரில் பவுல் கொலோசெயர்கள் எல்லாரையும் அறிந்து உலகெங்கும் உள்ள சகல பரிசுத்தவான்களையும் அன்புகூர்ந்தார்கள் என்று பவுல் குறிப்பிடவில்லை. கொலோசெயிலிருந்த சகோதரர்களும் பரிசுத்தவான்களும் தங்களுக்குத் தெரிந்த அல்லது கேள்விப்பட்ட "சகல" பரிசுத்தவான்களிடத்திலும் அன்புகூர்ந்தார்கள் எனும் பொருளில் அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும். பிற கிறிஸ்தவர்களிடத்தில் அன்பு கூருவதற்கு நாம் அவர்களை முழுமையாய் அறிந்து கொள்ளும் வரை காத்திருக்க வேண்டுவதில்லை. சகோதரர்களைச் சந்தித்த மாத்திரத்தில் அல்லது அவர்களைக் குறித்துக் கேள்விப்பட்ட மாத்திரத்தில் நாம் அவர்களிடத்தில் அன்புகூர வேண்டும். தேவனுடைய அன்பிலிருந்து நம்முடைய அன்பை மாதிரிப்படுத்திக் கொள்ள வேண்டும்.*

## பரலோகத்தைக் குறித்த அவர்களுடைய நம்பிக்கை *(1:4, 6அ)*

**[4]பரலோகத்திலே உங்களுக்காக வைத்திருக்கிற நம்பிக்கையினிமித்தம், ... [6அ]அந்த நம்பிக்கையைக் குறித்து, நீங்கள் முன்னமே சத்திய வசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள்.**

***"பரலோகத்திலே உங்களுக்காக வைத்திருக்கிற நம்பிக்கையினிமித்தம்" (1:4)***

*(நம்பிக்கை)* **யினிமித்தம்** *என்ற பவுலின் வார்த்தை பயன்பாட்டைக் குறித்து விளக்கவுரையாளர்களுக்குள் போராட்டம் இருக்கிறது. "பவுலின் சொல்நடை நமது நம்பிக்கையைக் குறித்து சிந்திக்க தடைசெய்கிறது, விசுவாசம் மற்றும் அன்பின் விளைவாக அப்படியாகிறது, ஆனால் இதற்கு அப்படியே எதிர் மாறானது இது."[8]*

*சிலர் தங்களுக்குப் பிரச்சனையாகத் தோன்றுகிறதை விடுத்து பவுல் ஸ்தோத்திரஞ் செலுத்துவதன் அடிப்படையாக இருப்பது நம்பிக்கை மாத்திரமே என்று மறு அமைப்பை இந்த வசனப்பகுதிக்குக் கொடுக்கின்றனர். "விசுவாசம்" தேவனுடைய வசனத்தினால் வருகிறது (ரோமர் 10:17; காண்க யோவான் 17:20), மேலும் "அன்பு" தேவனுடைய அன்பை ஏற்றுக்*

*கொள்ளும் எதிர்கிரியை (1 யோவான் 4:9). இந்த ஒழுக்கங்கள் நம்பிக்கையின் அடிப்படையைக் கொண்டதாக இருக்கக்கூடும். ஒரு எரிந்து கொண்டிருக்கிற வீட்டிற்குள் சிக்கிக்கொண்ட ஜனங்கள் அன்பின் அடிப்படையில் நம்பிக்கையை எழுப்பி தங்களில் அன்புகூருகிறவர்கள் தங்களை விடுவிப்பார்கள் என்கிற உறுதியான நம்பிக்கையுடையவர்களாவார்கள். அதே போல அவர்கள் தங்கள் நம்பிக்கையை விசுவாசத்தின் அடிப்படையில் கொண்டு, தீயணைப்பு வீரர்களின் திறமையினால் ஆபத்திலிருந்து தங்களை விடுவிப்பார்கள் என்ற உறுதியான நம்பிக்கையைக் கொண்டிருக்கலாம். நம்பிக்கை, அன்பு மற்றும் விசுவாசத்தை அடிப்படையாகக் கொள்ளக் கூடும்.*

**நம்பிக்கை** *(elpis), என்பது "எதிர்ப்பார்ப்பு," கிறிஸ்தவ ஒழுக்கங்களில் முக்கியமான ஒன்று. இது ஏதோ கிடைத்தால் நலம் என்கிற எண்ணம் அல்ல, உறுதியான நம்பிக்கையோடே எதிர்பார்க்குதலும் விசுவாசத்தின் மேல் கட்டப்பட்ட முழு நிச்சயமுமாகும் (எபிரெயர் 11:1). இப்படியாக நம்பிக்கை விசுவாசத்தின் பலனாக வருவது (கலாத்தியர் 5:5) அது தேவனிலும் இயேசுவிலும் வைக்கிற ஒன்று (நடபடிகள் 24:15; 1 தெசலோனிக்கேயர் 1:3; 1 தீமோத்தேயு 1:1; 1 பேதுரு 1:21). எழுதப்பட்ட வசனங்களிலும் வெளிப்படுத்தப்பட்ட சுவிசேஷ சத்தியங்களிலும் கூட விசுவாசம் வைக்கப்படுவது (ரோமர் 15:4; கொலோசெயர் 1:23). இயேசுவின் உயிர்த்தெழுதல் நமக்கு உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை அளிக்கிறது (நடபடிகள் 23:6; 1 பேதுரு 1:3, 4). அனைத்துக் கிறிஸ்தவர்களும் ஒரே நம்பிக்கையின் பங்காளிகளாயிருக்கிறார்கள் - இரட்சிப்பை அளிக்கிற நம்பிக்கை, அந்த ஒரே ஒரு நம்பிக்கை, நித்திய ஜீவனை சாத்தியமாக்குகிறது (கொலோசெயர் 1:5; 1 தெசலோனிக்கேயர் 5:8; தீத்து 1:2; 3:7). அளவற்ற தயவைக் கொடுக்கிற தேவனுடைய கிருபை நம்பிக்கையைக் கொடுக்கக் கூடும் (2 தெசலோனிக்கேயர் 2:16; 1 பேதுரு 1:13), அந்த நம்பிக்கை ஜனங்களுக்கு செயல்தூண்டுதலை ஏற்படுத்தி இரட்சிக்கப்படவும் சுத்தமான வாழ்க்கையை வாழும் படியாகவும் செய்கிறது (ரோமர் 8:24; 1 யோவான் 3:3). நம்பிக்கை நிச்சயத்தைக் கொடுக்கிறது (எபிரெயர் 6:11) அதிலே கிறிஸ்தவர்கள் சந்தோஷப்படுகிறார்கள் (ரோமர் 5:2; 12:12). இப்படிப்பட்ட நம்பிக்கை உண்டாயிருப்பதினால், ஒருவர் கிறிஸ்துவுக்குள் கொண்டிருக்கிற விசுவாசம் அவரை வெட்கப்படுத்தாது (ரோமர் 1:16). அது ஆத்தும நங்கூரமாயிருக்கிறது (எபிரெயர் 6:18, 19).*

*சில காரியங்களில் நம்பிக்கை வைக்காவிட்டால், அடைந்து கொள்ள எந்த பிரயாசமும் எடுக்காமலேயே பெரும்பாலும் விட்டுவிடுவார்கள். நம்பிக்கை. தன்னில் தானே, எப்படியிருப்பினும் மதிப்பில்லாதது; நம்பிக்கையோடே கூட "அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமும்" அவசியம் (கலாத்தியர் 5:6). விசுவாசம் மற்றும் அன்பின் அடிப்படையில், நம்பிக்கைகாட்டப்படுகிறது, அது தேவனுடைய கிருபையின் மேல் அஸ்திபாரம் இடப்பட்டது (1 பேதுரு 1:13). விசுவாசம் கிருபையைப் பெற ஏதுவாக்குகிறது, அதன்மேல் நம்பிக்கை கட்டப்படுகிறது.*

*கிறிஸ்தவர்களாகிய நமக்கு, நம்மிடத்தில் இல்லாததும், இன்னும் உணரப்படாததுமானவைகளைப் பெறுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. நாம் ஏற்கனவே அடைந்திருப்போமாகில், நாம் இனியும் நம்பிக் கொண்டிருக்க வேண்டுவதில்லை (ரோமர் 8:24) நம்பிக்கை என்பது தேவனுடைய*

*குறிப்பிடத் தக்க தனிப்பண்பல்ல ஏனெனில் கடந்த கால நிகழ்வுகளின் நிச்சயத்தை மனிதன் அறிந்திருப்பது போல அவர் எதிர்கால நிச்சயத்தை அறிந்திருக்கிறார். இம்மையில் அனுபவிக்கிற பரிபூரண ஜீவனோடு (யோவான் 10:10), பரலோகத்தைக் குறித்த நம்பிக்கை கிறிஸ்தவர்கள் இயேசுவுக்காக வாழ வலியுறுத்துகிற ஒரு செயலுக்கத்தைக் கொடுக்கிறது. கிறிஸ்துவின் தாசர்களுக்கு தற்கால வாழ்க்கை எதிர்பார்த்திருந்திருக்கிற மகிமையை ருசி பார்ப்பதற்கு ஒப்பானது. நிகழ்கால ஆசீர்வாதங்கள் இன்னும் அதிகமாய் அனுபவிக்கப்போகிற எதிர்கால நன்மைகளின் ஆரம்பம் என்ற நம்பிக்கையை நாம் கொண்டிருக்கிறோம்.*

*கிறிஸ்தவர்களின் நம்பிக்கை* ***பரலோகத்தில் வைக்கப்பட்டுள்ளது.*** *“வைக்கப்பட்டுள்ள” (apokeimai) என்பது “வைத்திருத்தல்” (லூக்கா 19:20), “சேர்த்துவைத்தல்,” அல்லது “ஒதுக்கீடு” என்றெல்லாம் பொருள்படும். இதே கிரேக்க வார்த்தை 2 தீமோத்தேயு 4:8 மற்றும் எபிரெயர் 9:27 வசனங்களில் காணுகிறது. இங்கே “நியமிக்கப்பட்டபடியே” என்று சொல்லப்படுகிறது. கிறிஸ்துவுக்குரியவர்களுக்கு பரலோகத்திலே இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட நிச்சயம் கிறிஸ்தவனுக்கு பரலோக நம்பிக்கையைக் கொடுக்கிறது. பவுல் எழுதினார், “நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது” (பிலிப்பியர் 3:20). கிறிஸ்தவர்கள் பரலோகத்தின் வாசிகள். பூமியிலே நாம் ஒரு அந்நிய நாட்டிலிருக்கிற பரதேசிகளைப் போன்றவர்கள், நமது சொந்த நாட்டையும் வீட்டைப் பிரிந்து நம்மைச் சுற்றியிருக்கிற சொந்த ஊர் சூழலைப் போல் இல்லாதிருக்கிறோம் (1 பேதுரு 2:11).*

*புதிய ஏற்பாட்டில் கிரேக்க வார்த்தையான ouranoi (நேரடிப் பொருளில், “பரலோகங்கள்,” பன்மையில்) அடிக்கடி காணப்படுகிறது, அதன் பொருள் “பரலோகம்.” கொலோசெயரின் பரலோக நம்பிக்கை பவுலால் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படவில்லை. அவர்கள் ஏற்கனவே சுவிசேஷத்தைக் கேட்டு தங்களுடைய பரலோக நம்பிக்கையை வளர்த்துக் கொண்டார்கள், பெரும்பாலும் எப்பாப்பிரா மூலமாக அவனுடைய போதனைகளால் அப்படி நடந்திருக்கும்.*

*“பரலோகம்” என்பது திருமறையில் மூன்று பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதல் பரலோகத்தில் (வானம்) என்பது பூமியைச் சுற்றியுள்ள ஆகாய விரிவு - அங்கே மேகக் கூட்டங்கள் மிதந்து வருகிறது, புகை எழும்புகிறது, விமானங்களும் பறவைகளும் பறக்கின்றன (மத்தேயு 6:26; 8:20). இரண்டாம் பரலோகம் (வானம்) என்பது நட்சத்திரங்களும் ராசிகளும் இருக்கிற மண்டலங்கள் (மத்தேயு 24:29). மூன்றாம் பரலோகம் என்பது தேவனும் அவருடைய தேவதூதர் சேனைகளும் வாசம்பண்ணும் இடம் (மத்தேயு 6:9; 18:10).*

*கிறிஸ்தவனின் நம்பிக்கை இயேசுவோடு கூட இருக்க வேண்டும் என்பதே. (யோவான் 14:3). இந்த இடம் மூன்றாம் வானமாகிய பரலோகமாயிருக்கக் கூடும். இதுவே 2 கொரிந்தியர் 12:2ல் குறிப்பிடப்படுகிறது. பரலோகம் என்பது மாம்சமும் இரத்தமும் சுதந்தரித்துக் கொள்ளக் கூடாத ஆவிக்குரிய இடமாகும்; அங்கே போகிறவர்கள் மாற்றம் பெறுவார்கள் (1 கொரிந்தியர் 15:50-53). பரலோகத்தில் உள்ளவர்கள் ஆவிக்குரிய சரீரங்களைப் பெறுவார்கள்*

*(1 கொரிந்தியர் 15:44), கிறிஸ்துவுக்கு ஒப்பாக மாறுவார்கள் (பிலிப்பியர் 3:21) மேலும் தேவனைப் போலவுமிருப்பார்கள் (1 யோவான் 3:2). தேவன் ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24), ஆவிக்குரிய ஜீவிகளுக்கு மாம்சமோ எலும்போ இல்லை (லூக்கா 24:39).*

*ஆவிக்குரிய, பரலோக ரீதியான இடத்தைக் கான இயலாது, அது நித்தியமானது, மாமிசரீதியான இடமோ, கண்ணில் காணக் கூடியது அநித்தியமானது (2 கொரிந்தியர் 4:18). அது ஆவிக்குரிய தன்மையுள்ளதாகையால், பரலோக ரீதியிலான அந்த இடத்தை மாமிச பொருட்களால் அதை விவரிக்க முடியாது, ஆனால் மாமிச காரியங்களோடு ஒப்பிட்டு மட்டுமே காணமுடியும். இதில் முக்கியமான உண்மை என்னவெனில் பரலோகத்தில் தேவனோடு இருப்பவர்கள் ஆனந்த மகிழ்ச்சியை மட்டுமே கொண்டிருப்பார்கள், ஏனெனில் அங்கே துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, பரலோகத்தில் மரணமுமில்லை (வெளிப்படுத்தின விசேஷம் 21:3, 4). அது "அழிவில்லாததும், மாசற்றதும், வாடாததுமான" ஒரு இடம் (1 பேதுரு 1:4). கொலோசெயர் இந்த இடத்திற்குச் செல்ல நம்பிக்கை கொண்டிருந்தனர், மேலும் அனைத்துக் கிறிஸ்தவர்களும் அங்கே செல்ல நம்பிக்கை கொள்ள முடியும்.*

*பவுல் கொலோசெயருக்கு ஒரு முறையான கிறிஸ்தவ ஜீவியத்திற்குரிய காட்சியைக் கொடுக்க வகை தேடினார். அவர்களுடைய நம்பிக்கை இவ்வுலக வாழ்வின் ஆசீர்வாதங்களுக்கு கட்டுப்பாடு வைத்திருக்கவில்லை. மாறாக, இந்த சகோதரர்கள் இரண்டு உலகங்களிலுமே மிகச் சிறப்பானதை அனுபவித்தனர்: இம்மையிலே கிறிஸ்துவுடனே கூட சந்தோஷ அனுபவ வாழ்க்கை மற்றும் மறுமை வாழ்விலும் பரலோகத்திலே அவரோடுகூட இருக்கிற நம்பிக்கை.*

## *ஸ்தோத்திர ஜெபம் (1:5)*

***5** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தி, எப்போழுதும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்.*

***"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதா" (1:5)***

*பவுல் "பிதா" என்ற வார்த்தையைப் பயன்படுத்தி தேவனோடு இயேசுவுக்கு உள்ள உறவுமுறையை விவரித்தார் (ரோமர் 15:6; 2 கொரிந்தியர் 1:3; 11:31). இயேசு தேவனை "என்னுடைய பிதா" என்று குறிப்பிட்டார் (உதாரணமாக, காண்க, மத்தேயு 7:21; 10:32, 33; லூக்கா 10:22; 24:49). மகதலேனா மரியாளினிடத்தில் அவர், "என் பிதாவினிடத்திற்கும்" "என் தேவனிடத்திற்கும்" தான் போவதாகச் சொன்னார் (யோவான் 20:17).*

***நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதா** என்பதை உடற்கூறு சம்பந்தப்பட்ட ரீதியில் பிறந்தவர் என்ற பொருளில், அவரது ஆரம்பம் ஒரு தகப்பனுடைய இனப்பெருக்க முறையின் பிறப்பில் வந்தவர் என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது. "பிதா" எனும் வார்த்தை பவுலால் பயன்படுத்தப்பட்ட விதம் பழைய ஏற்பாட்டை பிரதிபலிப்பதாய் இருந்தது. தேவன், "உங்களுக்குப் பிதாவாக இருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும்*

*குமாரத்திகளுமாயிருப்பீர்கள்" என்றார் (2 கொரிந்தியர் 6:18; காண்க 2 சாமுவேல் 7:14; 1 நாளாகமம் 17:13). சங்கீதம் 2:7ஐ மேற்கோளிட்டு இந்தக் கருத்து எபிரெயர் 1:5ல் இயேசுவுக்கு பயன்படுத்தப்பட்டது.*

*ஆரம்பம் என்பதைக் காட்டிலும், இந்த வசனங்களில், உறவுமுறையை பிரதிபலிக்கிறது. ஒரு பொருளில் பார்த்தால், இயேசு தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டார், ஏனெனில் அவருடைய மாமிச சரீரம் பரிசுத்த ஆவிநிழலிட்டு மரியாள் கர்ப்பமானதின் விளைவாக வந்தது (மத்தேயு 1:18; லூக்கா 1:35, 36). இது அவருடைய மாமிச பிறப்பிற்கு சாத்தியமாக்கிற்று. ஆகிலும், அவர் இந்த பிறப்புக்கு முன்னே இருந்தவர். அவர் ஆதியிலே பிதாவோடு இருந்தவர் (யோவான் 1:1), உலகத்தோற்றத்துக்கு முன்பே இருந்தவர் (யோவான் 17:5). சகலமும் அவரால் சிருஷ்டிக்கப்பட்டது (யோவான் 1:3, 10; கொலோசெயர் 1:16). நித்திய, தெய்வீக ஆவியின் தன்மை இயேசுவுக்கு ஒரு (மாமிச) தகப்பன் இருக்கச் செய்யவில்லை. அவர் நித்திய நித்தியமாய் இருந்தவர் (மீகா 5:2).*

*இயேசு தேவனுடைய குமாரன் எனப்பட்டார் ஏனெனில் பிதாவோடு அவருக்கு இருந்த தொடர்பு முறையால் அப்படி அழைக்கப்பட்டார். அப்படிப்பட்ட பதம் நெருக்கமான, இரக்கமுள்ள அன்பின் உறவுமுறையை இயேசு தேவனோடு பகிர்ந்து கொள்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது (யோவான் 15:9). இந்தக் கருத்து, "பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரன்" எனும் வார்த்தைகளில் வெளியிடப்படுகிறது (யோவான் 1:18).*

*"இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்" என்ற குறிப்பு அவர்கள் இருவரும் இருவேறுபட்ட நபர்கள் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. பிதாவும், குமாரன் இயேசுவும், ஒன்றாயிருக்கிறார்கள் (யோவான் 10:30), ஆனால் அவர்கள் ஒருவராயிருப்பதில்லை. குமாரன் நியாயத்தீர்ப்பு செய்வார் பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்பு செய்வதில்லை (யோவான் 5:22). இயேசு மறுபடியும் எப்பொழுதும் வருகிறார் என்பது பிதாவுக்குத் தெரியும். ஆனால் குமாரன் சொல்லும் போது எப்போழுது என்று தாம் அறியவில்லை (மாற்கு 13:32) என்று சொன்னார். இயேசு இப்பொழுது எல்லா வற்றுக்கும் எல்லாருக்கும் மேலானவராயிருக்கிறார், ஒருவரைத்தவிர - பிதா ஒருவரைத்தவிர - எல்லாவற்றையும் அவர் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார் (1 கொரிந்தியர் 15:27, 28).*

*பிதாவும் குமாரனும் ஒன்றாயிருக்கிறார்கள் என்ற கருத்து ஆவியாயிருக்கிற ஜீவிகளுக்கு இடையே மாத்திரம் இருக்கக்கூடிய ஒன்றாயிருத்தலைக் குறிக்கிறது. மாமிச சரீரங்கள் நேரடியில் ஒன்றாயிருக்க இயலாது, ஏனெனில் மாமிசத்தில் எப்பொழுதுமே சரீரங்கள் வேறுபட்ட நிலையில் பிரிந்திருக்கின்றன. ஆவியாய் உருப்படுத்தப்படுகிற ஆவியான ஜீவிகள் மனுக்குலத்தால் அறியப்படாததாயிருக்க, அவர்கள் எப்படி ஒன்றாயிருந்துகொண்டே வேறுபட்ட நிலையில் இருக்க முடியும் என அறிந்து கொள்ள இயலாது. மாமிசமாயிருக்கிற ஒருவருக்குள் ஒருவர் என்ற நிலையில் இருக்க முடியாது, ஆகிலும் இயேசு பிதாவிலும், பிதாவானவர் இயேசுவிலும் இருக்கிறார்கள்: "பிதா என்னிலும், நான் பிதாவிலும்" இருக்கிறோம் (யோவான் 10:38); "நான் பிதாவிலும், பிதா என்னிலும்" இருக்கிறார் (யோவான் 14:10, 11, 20). ஏனெனில் அவர்கள் ஆவியாயிருக்கிறார்கள், மாமிச ஜீவிகளல்ல.*

*“பிதாவுக்குள்” எனும் உட்படுத்துதல் மரியாதை கொடுப்பதையும் மனமுவந்து கீழ்ப்படிதலையும் காட்டுகிற ஒரு கருத்து (எபிரெயர் 5:8; பிலிப்பியர் 2:8). இதிலுள்ள உறவுமுறை ஒரு வளர்ச்சியடைந்த மகன் தன்னுடைய தகப்பனோடு இருத்தல், இரு நபர்களும் சமமாயிருத்தலைக் காட்டுகிறது. கிறிஸ்து இந்த சமமாயிருக்கிற நிலையில் சிலவற்றை துறந்து மனுஷீகத் தன்மையைப் பெறும்பொருட்டு மனித வர்க்கத்துக்கு ஊழியம் செய்யும்படி வந்தார் (பிலிப்பியர் 2:6, 7).*

*ஒரு குமாரன் தனது தகப்பனுடைய இயல்பை (தன்மையை) உடையவராயிருப்பார். தகப்பன் தேவனாக இருந்தால், பிறகு குமாரனும் தேவனாகத்தான் இருக்க வேண்டும் மற்றும் தேவனுக்கு சமமானவராய் இருக்கிறார். அவர் தேவனை தம்முடைய பிதா என்று அழைத்தபோது யூதர்கள் இந்த முடிவுக்கு வந்துதான் அவரைத் துன்புறுத்தினார்கள். தேவனை தம்முடைய பிதா என்று சொன்னதினால், அவர் “தம்மை தேவனுக்குச் சமமாக்கினார்” என்று அவர்கள் உணர்ந்தார்கள் (யோவான் 5:18).*

*“நம்முடைய கர்த்தராகிய” என்று குறிப்பிடப்பட்டது கிறிஸ்து நமக்கு மட்டுமே கர்த்தர் எனும் பொருளில் குறிப்பிடவில்லை - அதாவது, கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் ஒரே கர்த்தர் எனும் பொருளில் குறிப்பிடவில்லை. அதாவது, கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் ஒரே கர்த்தர் எனும் பொருளில் குறிப்பிடப்பட்டது. அவர் வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறார் (மத்தேயு 28:18). இன்னும் அளவுக்குட்பட்ட பொருளில் சொன்னால், எப்படியிருப்பினும், இயேசு கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே கர்த்தராயிருக்கிறார், அவரை கர்த்தராக ஏற்றுக் கொண்டவர்கள் வேறே கர்த்தாக்களுக்கு ஊழியம் செய்ய மாட்டார்கள். அவர் மட்டுமே அவர்களுடைய ஒரே கர்த்தர் (1 கொரிந்தியர் 8:6). நடைமுறையில், இது எப்பொழுதுமே உண்மையாயில்லாமல் இருக்கலாம்; ஆனால் நோக்கத்தில், இதுவே அவர்களின் இலக்கு. அவரைப் பின்பற்றாதவர்கள் அவரைத் தங்களுடைய வாழ்வின் கர்த்தராக கனப்படுத்துவதில்லை.*

*“கர்த்தர்” (kurios) என்பது தலையாய நிலையை உடையவர், ஆளுகை செய்பவர் என்றெல்லாம் பொருள்படும்.* Agrippa *ராஜா நடபடிகள் 25:26ல் இப்படி அழைக்கப்பட்டார். சில குறிப்பிடத்தக்க நிகழ்வுகளில், “கர்த்தர்” எனும் பதம் மரியாதை செலுத்துவதைக் குறிப்பிடுவதாக இருக்கும்; உதாரணமாக, ஒரு அடிமைக்கு மேலாக இருக்கும் எஜமானனுக்கு அது பயன்படுத்தக் கூடும் (மத்தேயு 18:25-34). புதிய ஏற்பாட்டில் பிதாவாகிய தேவனுக்கு அடிக்கடி அது பயன்படுத்தப்படுகிறது (மத்தேயு 11:25), ஆகிலும் மிக அதிகமாக குமாரனாகிய கிறிஸ்துவுக்குப் பயன்படுத்தப்படுகிறது (யோவான் 13:14; 1 கொரிந்தியர் 8:6).*

### *“(நாங்கள்) தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்” (1:5)*

*பவுல் தன்னையும் தீமோத்தேயுவையும் இணைத்து குறிப்பிட்டிருக்கலாம் அல்லது எளிமையாக தொகுத்தல் முறைப்படி “நாங்கள்” என்று பிற நிருபங்களைப் போல் பயன்படுத்தியிருக்கலாம். (ஆகிலும் “நாங்கள்” என்ற வார்த்தை நேரடியாக தமிழில் குறிப்பிடப்படவில்லை, மாறாக சொற்றொடர் ... செலுத்து “கிறோம்” என்று முடிகிறது) (1 கொரிந்தியர் 2:6, 7; 2 கொரிந்தியர் 4:1, 2). அவர் “நான்” என்ற பதத்தை தமது நிருபத்தில்*

குறிப்பிட்டு (உதாரணமாக கொலோசெயர் 1:23, 24, 25, 29; 2:1, 5) கொலோசெயர் நிருபத்தை தொகுத்தவர் தீமோத்தேயு அல்ல, பவுல்தான் என்று சுட்டிக் காட்டுகிறார் "பவுலாகிய நான் என் கையினால் எழுதி, உங்களை வாழ்த்துகிறேன்" என்று அவர் குறிப்பிட்டார் (கொலோசெயர் 4:18). இது வலியுறுத்தலோடு அவர்தான் நிருபத்தின் ஆசிரியர் (எழுதியவர்) என்பதைக் காட்டுகிறது.

கொலோசெயருக்கு பவுல் செய்த ஜெபம் வெறும் விண்ணப்பத்தையும் அவர்கள் சார்பாக ஆசீர்வாதங்களைக் கோருவதாக மாத்திரம் இருக்கவில்லை. அவருடைய ஜெபம் நன்றியறிதலையும், ஸ்தோத்திரஞ் செலுத்துதலையும் உட்படுத்தியிருந்தது.

**ஸ்தோத்திரம்** (*யூகாரிஸ்டியோ*) என்ற வார்த்தை பவுலின் எல்லா நிருபங்களிலும் நான்கில் மட்டும் தமது வாய்ப்பினை எதிர் பார்க்கும் வாசகர்களைக் குறித்து எழுதுகிறார் (கலாத்தியர், 2 கொரிந்தியர், 1 தீமோத்தேயு, மற்றும் தீத்து).[9] அப்படிப்பட்ட உணர்ச்சிகரமான சூழ்நிலையில் நன்றி சொல்லுதலின் அவசியத்தை நினைத்துப் பார்த்து பவுல் அப்படிச் சொல்லியிருக்கலாம். அவர்களைப் பற்றி தேவனிடத்தில் பேசினபோது, அவரும் தீமோத்தேயுவும் தங்கள் இருதயங்களில் நன்றியறிதலைக் கொண்டிருந்தார்கள் என்று கொலோசெயர் அறிய அனுமதித்தார். எப்பாப்பிரா வாயிலாக பவுல் கொலோசெயருரைக் குறித்து கேள்விப்பட்ட நல்ல அபிப்பிராயத்தின் பேரில் பவுலின் நன்றியுணர்வு எழும்பியது (கொலொசெயர் 1:7, 8). கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் அவர்தம்மை ஒப்புக்கொடுத்திருந்த தன்மை அவர் தமது சக கிறிஸ்தவர்களின் வாழ்வு நிலை குறித்து சந்தோஷப்படவோ வருத்தப்படவோ வைத்தது (2 கொரிந்தியர் 7:7, 8; 1 தெசலோனிக்கேயர் 3:9). அவரது நன்றியுணர்வு நேரடியாக **தேவனுக்குத்** தெரியப்படுத்தப்பட்டது, ஏனெனில் சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கும் மூல காரணமாயிருக்கிறார் (எபேசியர் 1:3) மற்றும் கொலோசெயர்களை ஆசீர்வதித்திருக்கிறார்.

### "எப்பொழுதும் உங்களுக்காக விண்ணப்பம் பண்ணுகிறோம்" (1:5)

பவுல் தான் மட்டும் எப்பொழுதும் ஜெபிக்கக் கூடியவராக இராமல், மற்றவர்களையும் கூட இடைவிடாமல் ஜெபிக்கும்படி உற்சாகப்படுத்தினார் (1 தெசலோனிக்கேயர் 5:17). **எப்பொழுதும் ஜெபிக்கிறேன்** என்ற பவுலின் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ள விதம் மற்றும் இடைவிடாமல் "ஜெபியுங்கள்" எனும் பதத்தின் மூலம் பவுல் "இடைவெளியே இல்லாமல்" அல்லது "முடிவில்லாமல்" அதாவது இடையில் நிறுத்தாமல் ஜெபியுங்கள் எனும் பொருளில் சொல்லவில்லை. அவர் தினசரி ஜெபிக்க வேண்டிய அவசியத்தை குறிப்பிட்டார்.

அப்போஸ்தலர் நடபடிகளில் ஜெபத்திற்கு முக்கியமான இடத்தை பவுல் கொடுத்தார் என காண்கிறோம். இயேசுவை தரிசித்தவுடன் அவர் ஜெபித்தார் (9:11), மூப்பர்களை நியமிப்பதற்கு முன் ஜெபித்தார் (14:23), பிலிப்பிய சிறைச் சாலையில் இருக்கும் போது ஜெபித்தார். சகோதரர்களை விட்டு பிரிவதற்கு முன் ஜெபித்தார் (20:36; 21:5). தேவாலயத்தில் பிரவேசித்தபோது அவர் ஜெபித்தார் (22:17) மேலும் புபிலியுவினுடைய தகப்பனாரை சுகப்படுத்துவதற்கு முன் ஜெபித்தார் (28:8). அவர் கிறிஸ்தவர்களுக்காக

*மாத்திரமல்ல,[10] கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்காகவும் ஜெபித்தார்.*

*பவுல் தங்களுக்காக ஜெபிக்கிறார் என்று கேள்விப்பட்ட போது கொலோசெயர்களுக்கு மிகவும் ஊக்கமளிப்பதாக இருந்திருக்கும். அவருடைய முன்மாதிரியைத் தொடர்ந்து, கிறிஸ்தவர்கள் தங்களுடைய ஸ்தோத்திர ஜெபங்களை கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்காக தொடர்ந்து ஜெபிக்க வேண்டும்.*

## *அவர்களுடைய விசுவாசத்திலிருந்து உண்டான கனி (1:6ஆ)*

***6ஆ அந்தச் சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பி பலன்தருகிறதுபோல, உங்களிடத்திலும் வந்து, நீங்கள் அதைக் கேட்டு, தேவகிருபையைச் சத்தியத்தின்படி அறிந்து கொண்ட நாள் முதல், அது உங்களுக்குள்ளும் பலன் தருகிறதாயிருக்கிறது.***

***"அந்த சுவிசேஷம்" (1:6)***

*__சுவிசேஷம்__ என்பதற்கு கிரேக்க (euangelion) வார்த்தையின் பொருள் "நற்செய்தி." பவுலின் நிருபங்களில் அது மிக முக்கியமான ஒரு வார்த்தை, ஏறத்தாழ அறுபது முறைகாணுகிறது. சுவிசேஷம் இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை உள்ளடக்கியது (1 கொரிந்தியர் 15:1-4). ஆகிலும் அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைக் குறித்த செய்தியை உண்மையானதென பிரசங்கிக்கப்படுவதற்கு முன்பாகவே, சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது என்று இயேசு சொன்னார் (மத்தேயு 11:5). அந்த நேரத்தில் பிரசங்கிக்கப்பட்ட "நற்செய்தி" ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்பதுதான் (மத்தேயு 4:17). இந்த "சுவிசேஷம்தான்" சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படவிருந்த கிறிஸ்துவின் ராஜ்யம் (மத்தேயு 4:23; 9:35; மாற்கு 1:14). இந்த வார்த்தையை லூக்கா வினைச்சொல்லாக euangelizomai, என்பதை பயன்படுத்தினார், இதன் பொருள் "சுவிசேஷத்தை பிரசங்கி" (லூக்கா 4:18; காண்க 3:18; 4:43); ஆனால் "சுவிசேஷம்" எனும் பதத்தை பெயர்சொல்லில் பயன்படுத்தவில்லை. யோவானும் அதை உட்படுத்தவில்லை; ஆனால் "சுவிசேஷம்" "சத்தியத்துக்கு" சமமாக்கப்பட வேண்டியது (காண்க எபேசியர் 1:13), இதைத்தான் யோவான் அடிக்கடி பயன்படுத்தினார்.*

*உண்மையில், சுவிசேஷம் என்பது மரணம், அடக்கம் மற்றும் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கும் மேலானது. கொலோசெயர்கள் பரலோகத்தைக் குறித்து "சத்திய வசனமாகிய சுவிசேஷத்தினால்" கேள்விப்பட்டார்கள் என்று பவுல் எழுதினார். "சுவிசேஷத்தின் சத்தியம்" கலாத்தியர்களிடத்திலே நிலைத்திருக்கும்படி, பவுல் பேதுருவினிடத்தில் முகமுகமாய் எதிர்த்துப் பேசினார் (கலாத்தியர் 2:5, 14). பவுல் அவரை எதிர்த்து நின்றார், காரணம் - இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைக் குறித்து முறையற்ற நிலையில் நடந்து கொண்டார் என்பதினாலே அல்ல, மாறாக அவர் (பேதுரு) புறஜாதி கிறிஸ்தவர்களிடமிருந்து தன்னை தனிமைப்படுத்தினார் என்பதால் தான். இப்படி நடந்து கொள்வதால், அவர் சுவிசேஷத்தின் சத்தியத்தின்படி நடக்கவில்லை. சுவிசேஷம் கிறிஸ்தவர்கள் வாழ வேண்டிய*

*முறைப்படி நடந்து கொள்வதையும் உள்ளடக்கிப் பேசுகிறது (பிலிப்பியர் 1:27), இதில் பாவ நடத்தைகளை விட்டுவிடுதலையும் உட்படுத்தியிருக்கிறது (1 தீமோத்தேயு 1:10, 11). சுவிசேஷம்தான் இயேசு வெளிப்படுத்தின முழு (சகல) சத்தியம்.*

*சுவிசேஷத்தின் நோக்கத்தில் ஒன்று இரட்சிக்கப்படுவதற்குத் தேவையான முதற்கட்டக் காரியங்களை செயல்படுத்துவது. பவுல் சுவிசேஷம் இரட்சிக்கப்படுவதற்கு தேவ "பெலனாயிருக்கிறது" என்று சொன்னார் (ரோமர் 1:16) மேலும் அது சகல ஜாதிகளுக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டியது (மாற்கு 16:15). அதை விசுவாசித்து ஞானஸ்நானத்திலே கீழ்ப்படிந்தவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் (மாற்கு 16:16). சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கு நித்திய அழிவாகிய தண்டனையை இயேசு கொடுக்கும்படி வருவார் (2 தெசலோனிக்கேயர் 1:7-9).*

***"அந்த நம்பிக்கையைக் குறித்து, நீங்கள் முன்னமே சத்திய வசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள்" (1:6அ)***

*"சத்தியம்" (alētheia) ஒரு முழுமையான உண்மையைக் குறிக்கிறது, முற்றிலும் நம்பத்தகுந்த தகவல் - அது பொய்யானதும் நம்பத்தகாததற்கும் எதிரானது.* ***சத்திய வசனம்*** *புதிய ஏற்பாட்டில் ஒரு முக்கியமான கருத்து. மத்தேயும் மாற்குமே "சத்தியம்," எனும் பதத்தை இயேசு பயன்படுத்தியதாகக் குறிப்பிடவில்லை, ஆனால் லூக்கா அவரை மேற்கோள் காட்டி, "... மெய்யாகவே* ***(சத்தியத்தின்படி)*** *உங்களுக்குச் சொல்லுகிறேன், ... எலியாவின் நாட்களிலே ... தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தபோது, இஸ்ரவேலர்களுக்குள் அநேகம் விதவைகள் இருந்தார்கள் என்றார்" (லூக்கா 4:24, 25; வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது). தனது முகவுரையில், யோவான் இயேசு சத்தியத்தின் மூல ஆதாரம் என்று தொடர்புபடுத்தி "சத்தியத்திற்குரியவர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாயிருக்கிறார்கள்" (யோவான் 1:14, 17; 3:21) என்றார்.*

*இயேசுவே சத்தியத்தின் மூல ஆதாரம் (யோவான் 14:6; எபேசியர் 4:21). நியாயப்பிரமாணம் உண்மைப் பொருளின் நிழலாயிருந்தது (எபிரெயர் 10:1, 2), ஆனால் அது உண்மைப் பொருளல்ல (கொலோசெயர் 2:17). மோசே நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார், இயேசுவோ கிருபையையும் சத்தியத்தையும் கொண்டு வந்தார். இயேசு சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுத்தார் (யோவான் 18:37), மேலும் சத்தியத்தைக் குறித்துப் பேசிய அவருடைய தனிப்பட்ட உபதேசம் யோவான் புத்தகத்தின் மீதிப்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.*

*சத்தியத்தின்படி (உண்மையோடும்) தேவனை தொழுது கொள்ள வேண்டும் என்ற உபதேசத்தின் உண்மையிலிருந்து சத்தியத்தின் முக்கியத்துவத்தைத் காணமுடியும் (வசனம் 5; யோவான் 4:23, 24). சத்தியத்தின் மூலம் ஜனங்கள் விடுதலையாக்கப்படுகிறார்கள் (யோவான் 8:32), இருதயங்கள் சத்தியத்தினால் சுத்தமாக்கப்படுகிறது (1 பேதுரு 1:22). பொய்கள் பிசாசிடத்திலிருந்து வருகிறது ஏனெனில் அவனுக்குள் சத்தியமில்லை (யோவான் 8:44). பரிசுத்த ஆவியாகிய சத்திய ஆவியினால் வெளியாக்கப்பட்ட தேவனுடைய வசனத்தில் குறிப்பிடப்பட்டவைகளில் ஆவிக்குரிய சத்தியத்தைக் காணமுடியும். இயேசுவின் போதனைகளில் தரித்திருப்போர் சத்தியத்தை அறியமுடியும்.*

*உலகத்தில் அநேகம் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருக்கிறார்கள் (1 யோவான் 4:1), ஆனாலும் தேவன் தமது சத்தியத்தை வெளிப்படுத்தினவர்களின் வார்த்தைகளைக் கொண்டு கிறிஸ்தவர்கள் அவர்களின் போதனைகளை நியாயந்தீர்க்கமுடியும் (1 யோவான் 4:6). தேவனுடைய நியாத்தீர்ப்பு சத்தியத்தின் படியாக இருக்கும் (ரோமர் 2:2;* KJV; NKJV; NIV).

***கேட்டலைக்*** *குறித்து திருப்பித்திருப்பி வசனம் 3, 6, 9, 22 ஆகியவற்றில் பேசப்படுவது பவுலால் அவருடைய வாசகர்களுக்கு ஒரு நினைப்பூட்டுதலாக, அவர்களுடைய விசுவாசமும் நம்பிக்கையும் தேவனுடைய வசனத்தின்படி செயல்பாட்டுத் தொடர்பு மூலமாக வந்தது என்று காண்பித்தார். அவர்களுடைய விசுவாசமும் நம்பிக்கையும் எழுதப்பட்ட பதிவேடுகளின் அடிப்படையில் அமைந்ததல்ல மாறாக அவர்கள் கேட்டதன் அடிப்படையில் வந்தது.*

***"அந்தச் சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பி பலன் தருகிறது போல" (1:6)***

*சுவிசேஷம் கொலோசெயர்களுக்கு மட்டும் உரியதாயிருக்க வில்லை ஆனால்* ***உலகமெங்கும்*** *உள்ள அனைத்து மக்களுக்கும் உரியது. எல்லா இடங்களிலுமுள்ள எல்லா ஜனங்களுக்கும் அதே செய்தியாக இருக்கிறது. உலகத்தை இரட்சிப்பற்கு தேவனுடைய திட்டம் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதன் மூலமாக மட்டும்தான் (மாற்கு 16:15, 16; ரோமர் 1:16; 1 கொரிந்தியர் 1:21; 1 பேதுரு 1:10-12). அவருக்கு வேறே திட்டம் எதுவுமில்லை. இந்த உலகம் யாராகிலும் ஒருவர் சுவிசேஷத்தைக் கொண்டு செல்லாவிட்டால் அது தானாக கேட்டு கற்றுக் கொள்ள முடியாதது (ரோமர் 10:14-17).*

*பவுல் பயன்படுத்தியுள்ள உலக "மெங்கும்" அல்லது "சகல" என்ற வார்த்தை பூமியிலுள்ள சகல இடங்களிலும் என்று பொருள்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. பவுல் ரோம் அரசாளுகிற அனைத்துப் பகுதிகளையும் குறிப்பிட்டார் (காண்க ரோமர் 1:8). லூக்கா 2:1ல் லூக்கா அதே உலக "மெங்கும்" எனும் வார்த்தையை பயன்படுத்தினார்: "அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகஸ்து ராயனால் கட்டளை பிறந்தது."* (NASB *எனும் ஆங்கில மொழிபெயர்ப்பு திருமறையின் கீழ் குறிப்பு சரியாக அச்சிட்டுள்ளபடி "உலகமெங்கும் குடிமதிப்பு" எனும் வார்த்தை "ரோம அரசின்" என்று கூறுகிறது.)*

*அநேக பிரசங்கியார்களால் சுவிசேஷம் உலகில் எடுத்துச் செல்லப்பட்டது, பவுலால் மட்டுமல்ல அப்போஸ்தலர் நடபடிகளை வாசிக்கிற ஒருவர் இஸ்ரவேல் தேசத்துக்குப் புறம்பே பவுல் மட்டுந்தான் சுவிசேஷ ஊழியத்தில் தன்னை உட்படுத்தியிருந்தார் என்ற உணர்வைப் பெறக்கூடும். (நடபடிகள்) புத்தகத்தின் பின் பகுதியை லூக்கா பவுல் மாத்திரமே சுவிசேஷ ஊழியத்தில் தன்னை உட்படுத்தியிருந்தார் என்று அளவிட்டு காட்டுவது போல் எழுதியிருக்கிறார், ஆனாலும் பவுல் மட்டும்தான் புறஜாதி உலகில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் என்று பொருள்படுத்துவதில்லை. வேறே பிரசங்கியார்களும் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் நற்செய்தியைக் கொண்டு சென்றனர் (நடபடிகள் 11:19). சுவிசேஷம் உலகமெங்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது என்ற பவுலின் அறிவிப்பு தனக்கு அப்பால் அநேகர் சுவிசேஷத்தை அறிவிப்பதில் ரோம உலகம் முழுவதும் மும்மரமாய் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை குறிப்பிடுகிறது.*

***"உங்களிடத்திலும் வந்து" (1:6)***

*கிறிஸ்தவம் துவக்கத்தில் கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தை உலகமெங்கும் கொண்டு போனதினால் பரவியது, உலகம் இயேசுவின் போதனைகளை வந்து கற்றுக் கொண்டதினாலே அல்ல. சத்தியம் - இப்படியாக சுவிசேஷம் - மனித காரணங்கள் மூலம் வெற்றியடைய முடியாது. மாறாக தேவன் அதை வெளிப்படுத்தியிருக்கிற படியால் அது கிடைக்கப் பெறுகிறது (கலாத்தியர் 1:11, 12).*

*கொலோசெயருக்கு சுவிசேஷம்* ***வந்தது*** *என்று பவுல் எழுதினார், அப்பொழுது பயன்படுத்தின வார்த்தை eis ("க்கு") eis என்பதற்கான மூலப் பொருள் "க்குள்," ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குள் மாறிப் போகுதல், ஒரு ரீதியிலிருந்து மற்றொன்றுக்கு கடந்து போதல், மற்றும் ஒரு திசையிலிருந்து மற்றொரு திசைக்கு போதல் என்றெல்லாம் பொருள்படும். புதிய ஏற்பாட்டில் eis எனும் வார்த்தை சிந்தனையிலோ அல்லது செயலிலோ பின்னோக்கி செல்லுவதைக் குறிப்பிடாமல் முன்னோக்கி செல்லுவதைக் குறிக்கும் என்பதே அடிப்படைப் பொருள். கொலோசெயரில் பவுல் அதைப் பயன்படுத்தின சில உதாரணங்களைச் சிந்தியுங்கள்: "பரிசுத்தவான்களெல்லார் மேலும்" (1:3); "உண்டாவதற்கு" (1:11); "பங்கடைவதற்கு" (1:12); "இராஜ்யத்திற்கு" (1:13); "அவருக்கென்று" (1:16); "இதற்கென்றே" (3:15); "... க்காக உங்களிடத்தில் அனுப்பியிருக்கிறேன்" (4:8). (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது.)*

*Eis எனும் இந்த வார்த்தையை, இயேசுவும் பயன்படுத்தினார். அவர் "இது பாவமன்னிப்புண்டாக்கும்படி அநேகருக்'காக'ச் (eis) சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது," என்றார் (மத்தேயு 26:28). அவருடைய இரத்தம் பாவமன்னிபிற்காக ஒன்றை எதிர் நோக்கி, ஒரு நோக்கத்திற்காக, சாத்தியப்படுத்தும் பொருட்டு சிந்தப்பட்டது - ஏற்கனவே மன்னிக்கப்பட்ட பாவங்களுக்காக அல்ல. இதற்குச் சமமான வசனங்களிலும் eis எனும் வார்த்தை மாற்கு 1:4, மற்றும் லூக்கா 3:3 ஆகிய சொற்றொடரில் பயன்படுத்தப்பட்டு "பாவமன்னிப்பிற் 'காக' eis என்று காணுகிறது" (மேலும் காண்க லூக்கா 24:47; நடபடிகள் 2:38). மனந்திரும்புதலும் ஞானஸ்நானமும் பாவமன்னிப்பிற்காக (eis). இந்த பொறுப்புகளெல்லாம் பாவமன்னிப்பை நோக்கமாகக் கொண்டு அதை பெறுவதற்கு எதிர்நோக்கி செயல்படுவது; அவைகள் ஏற்கனவே பெற்றுக்கொண்ட பாவமன்னிப்பினிமித்தம் பின்னோக்கிப் பார்ப்பதல்ல. மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுவோருக்கு இயேசுவின் இரத்தம் தான் பாவமன்னிப்பை அளிக்கிறது.*

*Eis என்னும் இந்த வார்த்தையை பவுல் அநேக வசனங்களில் பயன்படுத்தி எழுதினார்: 1:4, 6, 10, 11, 12, 13, 16, 20, 25, 29; 2:2, 5, 22; 3:9, 10, 15; 4:8, 11. இந்த வசனங்களெல்லாம் முன்னோக்கி எதிர்பார்ப்பன; எதுவுமே ஏற்கனவே பெற்றுக்கொண்ட செயல்களுக்கு திரும்பி பின்னோக்கிப் பார்ப்பதல்ல. சிலர் மத்தேயு 12:41ஆ வை விதி விலக்கு என காட்டுவதுண்டு: "அவர்கள் யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு மனந்திரும்பினார்கள் (eis)." இதை விதிவிலக்காக எடுத்துக் கொண்டாலும், நடபடிகள் 2:38 ஐ விதிவிலக்காக காட்ட முடியாது. நினிவே பட்டணத்து மக்கள் யோனாவின் பிரசங்கத்தைக் "கேட்டதினால்" மனந்திரும்பினார்கள் யோனாவின்*

பிரசங்கத்தை "பெறும்படியாக" அல்ல, என்று வாதிடப்படுகிறது. *Eis* என்பது எதிர்நோக்கியிருப்பதைக் குறிப்பதால், இந்த வசனப்பகுதியின் பொருள் யோனாவினால் பிரசங்கிக்கப்பட்டதினிமித்தம் விளைந்த ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்கு அவர்களுடைய வாழ்க்கை உட்படுத்தப்பட்டது. ஆவிக்குரிய திசையில் போகும்படி யோனா சுட்டிக்காட்டிய பிரசங்கத்தால் அவர்கள் யோனாவின் பிரசங்கத்திற்கு மனந்திரும்பினார்கள் என்று அவர்களைக் குறித்து அவர்கள் விளக்கமளிக்கலாம்.

### "நீங்கள் அதைக் கேட்டு, தேவ கிருபையை சத்தியத்தின்படி அறிந்து கொண்டீர்கள்" (1:6)

கொலோசெயில் விதை விதைக்கப்பட்டிருந்தது. **அது முதல்** அது பெலன் தந்தது என்று பவுல் சொன்னார், (கெலொசெயர்கள்) அதைக் **கேட்டு, தேவகிருபையை சத்தியத்தின்படி அறிந்து கொண்டார்கள்.**

இந்த சகோதரர்கள் சுவிசேஷத்தைப் புரிந்து கொள்ளும் நாள் வரை அதை அவர்கள் பிறருடன் பகிர்ந்து கொள்ள வில்லை. இதன் பயன்பாட்டுக் கருத்து என்னவெனில் தேவ கிருபையின் சுவிசேஷத்தை தங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் மிக முன்னதாகப் பற்றிக் கொண்டார்கள், கிறிஸ்தவ ஜீவியம் தொடங்கி, தொடர்ந்து, அவருடைய கிருபையில் தரித்திருந்தது. "கிருபையின்" கருத்து "கிருபை" என்ற வார்த்தையை பயன்படுத்தாமலேயே சிலுவையையும் பாவமன்னிப்பையும் பிரசங்கிப்பதன் மூலம் போதிக்கலாம். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையையும் உயிர்த்தெழுதலையும் புரிந்து கொள்ளுதலின் அடிப்படையில் தான் இரட்சிப்பு இருக்கிறது (ரோமர் 3:25; 10:9, 10). பாவங்களை மன்னிப்பதும் தனிப்பட்ட மனிதர்களின் சுதந்திரமாக எடுக்கும் முடிவில் இருக்கிறது இதுதான் கிருபை.

இந்த கிருபையைக் குறித்துப் பேசும் சுவிசேஷ புத்தகங்களில், லூக்கா மட்டுமே "கிருபை" (*charis*) என்ற வார்த்தையை இயேசு பயன்படுத்துவதாக லூக்கா குறிப்பிடுகிறார் (லூக்கா 6:32-34; 17:9), ஆனால் ஒருபோதும் அளவற்ற தயவு எனும் ரீதியில் பேசவில்லை. *Charis* எனும் பதம் மத்தேயுவும் மாற்கும் குறிப்பிடவில்லை, மாறாக யோவானின் வாழ்த்துரையில் மட்டுமே காணுகிறது (1:14, 16, 17).

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சுவிசேஷததைப் பிரசங்கித்தவர்கள் ஒரு போதும் *charis* என்ற வார்த்தையை தங்களுடைய பிரசங்கத்தில் பயன்படுத்தியதில்லை, ஆனால் எண்ணற்ற முறை அவர்களுடைய சுவிஷே பிரசங்கத்தைக் குறித்த சந்தர்ப்பப் பகுதியில் அப்படிப்பட்ட வார்த்தைகள் காணப்படுகிறது:

- அந்தியோகியாவிலுள்ள கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்தும்படி எருசலேம் சபை, பர்னபாவை அனுப்பியபோது, சகோதரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட "தேவ கிருபையை" அவர்கள் வந்து சாட்சியிட்டதைக் குறித்து (சபையார்) சந்தோஷப்பட்டார்கள் (நடபடிகள் 11:22, 23).
- தங்களுடைய முதலாவது சுவிசேஷப் பயணத்தில் அந்தியோகியாவிற்கு அவர்கள் வந்தபோது, பவுலும் பர்னாபாவும் "தேவ கிருபையில்"

நிலைகொண்டிருக்கும்படி கிறிஸ்தவர்களுக்கு அறிவுரை கூறினார்கள் (13:43). இக்கோனியாவில் தேவன் தமது “கிருபையுள்ள வார்த்தைக்கு” சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அவர்கள் கையினால் நடப்பிக்கும்படி அநுக்கிரகம் பண்ணினார் (நடபடிகள் 14:3). அவர்கள் நிறைவேற்றின கிரியைக்காகத் “தேவனுடைய கிருபைக்கு” ஒப்புவிக்கப்பட்டுப் புறப்பட்டு அந்தியோகியாவுக்கு வந்தார்கள் (நடபடிகள் 14:26).

- பேதுரு பேசுகையில் “இயேசு கிறிஸ்துவின் கிருபையினால்,” யூதர்கள் இரட்சிக்கப்படுவது போலவே புறஜாதிகளும் இரட்சிக்கப்படுகிறார்கள் என்று சொன்னார் (நடபடிகள் 15:11).
- பவுலும் சீலாவும் இரண்டாவது சுவிசேஷப்பயணத்தில் செல்லும்போது, சகோதரராலே “தேவனுடைய கிருபைக்கு” ஒப்புவிக்கப் பட்டார்கள் (நடபடிகள் 15:40).
- அப்பொல்லோ “கிருபையினாலே” விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான் (நடபடிகள் 18:27).
- எபேசு பட்டணத்து மூப்பர்களுக்கு பவுல் தனது ஊழியத்தை முடிக்கவும், தேவனுடைய “கிருபையின் சுவிசேஷத்தை” பிரசங்கிக்கவும் விரும்பினார் (நடபடிகள் 20:24) மேலும் “அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கு” அவர்களை ஒப்புக்கொடுத்தார் (நடபடிகள் 20:32).

“கிருபை,” எனும் தலைப்பு உட்பட எந்த பிரசங்கமும் அப்போஸ்தலர் நடபடிகளில் பதிவு செய்யப்பட்டிராவிட்டாலும் கூட, அதின் செய்தியில் எப்பொழுதும் இயேசு கிறிஸ்து மூலமாய் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பும், இரட்சிப்பும் மற்றும் நீதிமானாக்கப்படுவதும் உட்படுத்தப்படுகிறது (நடபடிகள் 3:19; 4:12; 10:43; 13:26, 39; 16:31, 32; 22:16). இப்படியாக, “கிருபை” எனும் வார்த்தை பெயரிடப் படாவிட்டாலும், இயேசு மூலமாக கிடைக்கும் பாவமன்னிப்பு பிரசங்கிக்கப்பட்ட போதெல்லாம் இதுவும் பிரசங்கிக்கப்பட்டது.

கொலோசெயர்கள் இந்த கிருபையை “அறிந்து கொண்டிருந்தார்கள்” என்று பவுல் சொன்னார். “அறிந்து கொண்டிருத்தல்” (*epiginōskō*) என்பது ஒரு தொகுப்பு வார்த்தையாகும், அது முற்சேர்க்கை *epi*, ஏதோ ஒன்றின் “பேரில்,” மற்றும் *gnosis* “அறிந்து கொள்ளுதல்” என்று பொருள். இந்த வார்த்தை அறிவுக்கூர்மையால் அறிந்து கொள்ளுவதைக் காட்டிலும் அல்லது ஏதோ ஒன்றை புரிந்து கொள்வதைக் காட்டிலும் மேலானது. போதனையினாலும் அனுபவத்தினாலும் முழுமையாய் அறிந்து கொள்வது என்பது இதன் பொருள். அடிப்படைக் கருத்துக்களை முழுமையாய் பற்றிக் கொண்டு அடைகிற ஒரு புரிந்து கொள்ளுதலைப் பற்றி பவுல் பேசுகிறார், புதிய ஏற்பாட்டில், இப்படிப்பட்ட வார்த்தை அமைப்புகள் பொதுவாக ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதலுக்கு பயன்படுத்தப்படுகிறது (ரோமர் 1:28; எபேசியர் 1:17; 4:13; கொலோசெயர் 3:10; 1 தீமோத்தேயு 2:4). கொலோசெயர்கள், கிறிஸ்துவின் செய்தியைக்கேட்டு அதன்படி வாழ்ந்ததினால், சுவிசேஷத்தின் பொருளை மோலோட்டமாயல்ல, ஆழமான பொருளை அறிகிற உணர்வை

*அடைந்தார்கள்.*

*சுவிசேஷம் அறிந்து கொள்ளப்படத் தக்கது. கொலோசெயர்கள் இதற்கு ஒரு எடுத்துக் காட்டு. அவர்கள் அதைக் கேட்டு அறிந்து கொண்டார்கள். பவுல் தான் எழுதியவைகளை எபேசியர்கள் பற்றிக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்த்தார். அவர், "... அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்து கொள்ளலாம்" என்று சொன்னார் (எபேசியர் 3:4, 5). அவர் கொரிந்தியர்களுக்கு உறுதிப்படுத்தி, "ஏனென்றால் நீங்கள் வாசித்தும் ஒத்துக்கொண்டுமிருக்கிற காரியங்களையேயன்றி, வேறொன்றையும் நாங்கள் உங்களுக்கு எழுதவில்லை; முடிவுபரியந்தமும் அப்படியே ஒத்துக்கொள்வீர்கள் என்று நம்பியிருக்கிறேன்" (2 கொரிந்தியர் 1:13) என்றார்.*

*அவர்கள் "சத்தியத்தை" "புரிந்து கொண்டார்கள்" என்று குறிப்பிடுவதால், பவுல் தேவனுடைய கிருபையின் உண்மையான பொருளை அவர்கள் அறிந்து அனுபவத்தில் வந்துவிட்டார்கள் என்று பொருள் படுத்தினார். கிருபையைக் குறித்த அவர்களுடைய அறிவுப்பூர்வமான அறிவுக்குக் கூடுதலாக, தேவனுடைய கிருபையின் ஆசீர்வாதங்களை அவர்கள் தங்கள் வாழ்க்கையிலே உணர்ந்து கொண்டார்கள், "சத்தியத்தில்," வெறும் தோற்றத்துக்குப் பதிலாக கிருபையின் அர்த்தத்தை அவர்கள் அறிந்து கொண்டார்கள்.*

### *"அது பரம்பி பலன் தருகிறதுபோல ... அது உங்களுக்குள்ளும் பலன் தருகிறதாயிருக்கிறது" (1:6)*

*சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதாலும் அதன்படி வாழ்வதாலும் வருகிற விளைவு பரம்பி* **தொடர்ந்து பலன் தருகிறதாயிருக்கிறது.** *கிரேக்க வினைச்சொல் இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. Karpophoroumenon என்பது (பொருள் "கனி கொடுத்தல்") "இயல்பான சக்தியைக்" குறிப்பிடுகிறது.[11] இந்த விளக்கமளிக்கும் பதம் சுவிசேஷத்தின் பயனாக சக்திமிகுந்த உற்பத்தித்திறன் சுட்டிக்காட்டப்படுகிறது. பவுல் "சுவிசேஷம் இரட்சிக்கப்படுவதற்கு தேவபெலனாயிருக்கிறது" (ரோமர் 1:16) என்றார்.*

*இயேசுவின் விதைக்கிறவனைப் பற்றிய உவமையின்படி, வசனம் அதின் உற்பத்தியாகிற மூலக்கூறு என்று விளக்கப்படுத்துகிறார். இந்த உவமையில் ஒரு நிலத்தில் விதைக்கப்பட்டுள்ள விதைகளைப்பற்றி இயேசு கூறினார். "விதை தேவனுடைய வசனம்" (லூக்கா 8:11), "இராஜ்யத்தின் வசனம்" (மத்தேயு 13:19). என்று இயேசு விளக்கமளித்தார் கனி கொடுக்கப்படுவதற்கு, வசனம் விதைக்கப்பட வேண்டும். இயேசு, "நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" என்றார் (யோவான் 6:63). சத்திய வசனமாகிய விதையின் மூலமாக, ஆத்துமாக்கள் சுத்திகரிக்கப்பட்டு மறுபடியும் பிறக்கிறது (1 பேதுரு 1:22, 23) புதிய ஜீவனை உருவாக்குகிறது.*

*மாமிசப் பிரகாரமான விதைகளுக்கு உற்பத்தித்திறன் அளவிடப்பட்டது, ஆவிக்குரிய விதையிலும் இது உண்மை. ஆவிக்குரிய விதை தொடர்ந்து இது உண்மை. ஆவிக்குரிய விதை தொடர்ந்து பலன் கொடுக்க, குறிப்பிடப்பட்ட சில நிபந்தனைகள் உண்டு: (1) விதையில் ஜீவன் இருக்கவேண்டும். (2) ஏதோ ஒன்று அல்லது யாராவது ஒருவர் விதையை விதைக்க வேண்டும். (3) அது நல்ல நிலத்தில் விழ வேண்டும். (4) அது (பயிர் வளர்ந்து வரும்*

*போது) களையெடுக்கப்பட வேண்டும். (5) ஒரு விதையிலிருந்து வளரும் செடி மேலும் பல விதைகளை உற்பத்தி செய்ய வேண்டும். இயேசுவின் ராஜ்யம் இப்படியாகத்தான் உலகம் முழுவதும் பரவவேண்டும். வசனத்துக்குக் கீழ்ப்படிபவர்கள் மற்றவர்களோடு வசனங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் கனி கொடுக்கக் கூடும். பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் நமக்கு விதையை அளித்துள்ளனர், ஆனால் அவர்கள் அந்த விதைகளை விதைப்பதில்லை. இயேசுவைப் பின்பற்றுவோர் நடவும் நீர் பாய்ச்சவும் வேண்டிய பொறுப்புக் கொடுக்கப்பட்டுள்ளனர் (1 கொரிந்தியர் 3:6) விதைப்பதற்கும் அறுப்பதற்குமுரிய பொறுப்பும் அவர்களுக்கு உண்டு (யோவான் 4:35-38). இந்த சிலாக்கியத்தையும் பொறுப்பையும் குறித்து பவுல், "இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்." என்று குறிப்பிட்டார் (2 கொரிந்தியர் 4:7).*

*முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் வசனத்தை அவர்கள் சென்ற இடத்திற்கெல்லாம் கொண்டு சென்றனர். இதினால், ஜனங்கள் தினசரி மனமாற்றப்பட்டார்கள், சபை வேகமாய் பெருகி வளர்ந்தது. "சத்திய வசனமாகிய, சுவிசேஷத்தை" பிரசங்கித்ததை ஜனங்கள் ஏற்றுக்கொண்ட போது எண்ணிக்கையிலும் வளர்ந்தது (எபேசியர் 1:13).*[12] *உள்ளூர் சபைகள் பல வித்தியாசப்பட்ட ஒழுங்குமுறைகளைப் பின்பற்றி சபை வளர முற்படலாம், ஆனால் தேவனுடையத்திட்டப்படி வசனத்தை பிரசங்கிப்பதன் மூலம் மட்டுமே வளரவேண்டும் (நடபடிகள் 8:4, 25; 18:11; 2 தீமோத்தேயு 4:2). ஆதிச்சபை தொடர்ந்து "கனிகொடுத்து விருத்தியடைந்தது" ஏனெனில் அது தொடர்ந்து தேவனுடைய வசனத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டது. கார்ஸன் என்பவர் எழுதியதாவது,*

> *ஆனால் சுவிசேஷம் உள்ளுக்குள் மட்டுமே ஆழமாய் கிரியை செய்வதில்லை, ஆகிலும் அது தொடர்ந்து தன் செல்வாக்கில் வளருகிறது தேவனுடைய அருளால் இந்த இரண்டும் இணைக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக அதின் தனிப்பட்ட அங்கத்தினர்களின் கனிகொடுத்தல் மூலமாக அவர்மூலம் மற்றவர்களைச் சென்றடைகிறது; பரிசுத்தத்தின் ஆழத்தில் சுவிசேஷம் மற்றவர்கள் மீது ஏற்படுத்தும் தாக்கத்தினால் பொருத்தமான வளர்ச்சிக்கு வித்திடுகிறது.*[13]

*"கனி" என்பது இரண்டு வித்தியாசப்பட்ட வகைகளைக் கொண்டது, எண்ணிக்கையில் மற்றும் ஆவிக்குரிய ரீதியில். எண்ணிக்கையில் என்பது கிறிஸ்துவிடத்தில் கொண்டு வரப்பட்ட ஜனங்களைக் குறிக்கிறது (யோவான் 4:34-36; 12:24; 15:8, 16; ரோமர் 1:13; பிலிப்பியர் 1:22). ஆவிக்குரிய கனிகள் (அல்லது "ஆவியின் கனி"; கலாத்தியர் 5:22, 23) தேவ பக்திக்குரிய தகுதிகளை விருத்தி செய்வதை இயேசு விவரித்த அடிப்படைகளைக் குறிப்பிடுகிறது. இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகள். கிறிஸ்துவினிடத்தில் கொண்டுவரப்படுபவர்கள் அவருக்குள் காணப்படும் தேவையான தகுதிகளை வளர்த்துக்கொள்ள வகை தேட வேண்டும். இதன் விளைவாக அவர்கள் கிறிஸ்துவுக்கு ஒப்பானவர்களாய் ஆகவும் தம்மைச் சுற்றிலுமிருக்கிறவர்களைத் தொடவும் ஏதுவாக்கும்.*

*எவ்விதக் கனியும் தன் இனத்திற்கேற்ற கனிகளைப் பிறப்பிக்க*

*வேண்டும் (ஆதியாகமம் 1:11, 12). இந்த விதி மாமிச மற்றும் ஆவிக்குரிய ரீதியில் உண்மையானது. தேவனுடைய வசனத்தின் கனி தேவனுடைய ராஜ்யமாகிய (மத்தேயு 13:19; லூக்கா 8:11) சபை. அவருடைய வசனத்தை விதைப்பதால், அதினால் உற்பத்தி ஆவது, கிறிஸ்துவின் சபையைச் சார்ந்த அங்கத்தினர்களாகிய, கிறிஸ்தவர்கள் என்கிற உற்பத்தி பொருட்கள் மட்டுமே. சத்தியமாகிய கனி சத்தியத்துக்குப் புறம்பான எந்த ஒரு கனியையும் கொடுக்காது. தேவனுடைய வசனம் பல்வேறுபட்ட கிறிஸ்தவக் கோட்பாடுகளாகிய நிழல்களை உருவாக்காது. சுவிசேஷத்தின் கனி சுவிசேஷத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றி ஒத்துப் போகிறதாயிருக்கிறது, அது போதனையிலும் ஜீவியத்திலும் பரிசுத்தத்தால் வெளிப்படுகிறது. சுத்தமான உபதேசத்தில் வாழும் வாழ்க்கையின் விளைவு சம்பந்தப்பட்டவர்களுக்குள் ஐக்கியத்தைக் கொண்டு வரும் (1 கொரிந்தியர் 12:13; எபேசியர் 4:4-6).*

*திராட்சைச்செடியும் அதன் கொடிகளும் பற்றிய உவமையில், இயேசு தம்மில் நிலைத்திருக்கிற கொடி எதுவோ அது கனிகளைக் கொடுக்கும் என்று போதித்தார். கனி கொடுக்காத கொடி எதுவும் வெட்டுண்டு அக்கினியே போடப்படும் (யோவான் 15:1-6). அதிகக் கனிகளை கொடுக்கும் கொடியே தேவனை மகிமைப்படுத்துகிறது (யோவான் 15:8).*

*வேறு இடங்களிலிருக்கிற சபைகள் மட்டும் கனிகளைக் கொடுப்பதில்லை,* ***உங்களிடத்திலும் பலன் தருகிறதாயிருக்கிறது*** *என்ற வார்த்தைகள் மூலம் கொலோசெயிலிருந்த கிறிஸ்துவின் சீஷர்களும் அப்படி கனிகளைக் கொடுத்திருக்கிறார்கள் என்று வெளிப்படுத்தப்பட்டது. அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்தை பகிர்ந்து கொண்டனர் மற்றும் அதன் பலனையும் காண்கிறார்கள். உள்ளூர் சபைகளின் அங்கத்தினர்கள் இயேசுவின் வார்த்தைகளை இழந்தவர்களுக்கு போதித்தால் மட்டுமே அது வளர்ச்சி பெறும். விதை விதைக்கப்பட்ட நிலத்தில் மட்டுமே அறுவடையை எதிர்பார்க்க முடியும். விதைக்கப்படாத வெற்று நிலத்தில் களைகள் வேண்டுமானால் முளைக்கக் கூடும், ஆனால் நல்ல தானியங்களை அருவடை செய்ய முடியாது.*

## *எப்பாப்பிராவின் அறிக்கை (1:7, 8)*

***[7]அதை எங்களுக்குப் பிரியமான உடன் வேலையாளும், உங்களுக்காகக் கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரனுமாயிருக்கிற எப்பாப்பிராவினிடத்தில் நீங்கள் கற்றறிந்திருக்கிறீர்கள்; [8]ஆவிக்குள்ளான உங்கள் அன்பையும் அவனே எங்களுக்குத் தெரியப்படுத்தினான்.***

***"எங்களுக்குப் பிரியமான உடன் வேலையாள்" (1:7)***

*பவுல் சகக் கிறிஸ்தவர்களுக்கும் அவரோடு ஊழியஞ்செய்து கொண்டிருந்த பிற ஊழியர்களுக்கும் எப்படிப்பட்ட அன்பைக் கொண்டிருந்தாரோ அதே அன்பைத்தான் எப்பாப்பிராவிடத்திலும் கொண்டிருந்தார். அவர் அடிக்கடி* ***பிரியமான*** *(agapētos) எனும் வார்த்தையைப் பயன்படுத்தினார், அவர் குறிப்பிட்ட உடன் வேலையாட்களில்: எப்பனெத்து (ரோமர் 16:5), அம்பிலியா (ரோமர் 16:8), ஸ்தோக்கி (ரோமர் 16:9), பெர்சியாள் (ரோமர் 16:12), தீமோத்தேயு (1 கொரிந்தியர் 4:17; 2 தீமோத்தேயு 1:2).*

தீகிக்கு (கொலோசெயர் 4:7; எபேசியர் 6:21), ஒநேசிமு (கொலோசெயர் 4:9), லூக்கா (கொலோசெயர் 4:14), மற்றும் பிலேமோன் (பிலேமோன் 1). ஆவர் சில வித்தியாசப்பட்ட சபைக்கு எழுதும்போது, அடிக்கடி அவர்களை "பிரியமானவர்களே" என்று அழைத்தார். பவுல் ரோமாபுரிக்கு போவதற்கு முன்பாகவே, ரோமிலிருந்த சபையை பிரியமானவர்களே என்று குறிப்பிட்டு எழுதினார் (ரோமர் 12:19). ரோமாபுரியிலிருந்த ஜனத்தாருக்கு தனது தனிப்பட்ட ரீதியிலான வாழ்த்துக்களை அனுப்பியதன் மூலம் அந்த சபையிலிருந்த அங்கத்தினர்களை தான் அறிந்திருந்ததைக் குறிப்பிட்டார். கொலோசெயிலிருந்த சபைக்கு "பிரியமானவர்களே" என்ற வார்த்தையைப் பயன்படுத்த வில்லை, அநேகமாக அவர் அவர்களில் அநேகரை சந்தித்ததில்லை என்பதால், அப்படி எழுதாமல் விட்டிருக்கலாம்.

பவுலின் வார்த்தைகளின் படி, எப்பாப்பிரா ஒரு **கொத்தடிமையாக** இருந்தார், (*sundoulos*) இது ஒரு தொகுப்பு வார்த்தை, *sun* என்றால் "உடன்," *doulos* "அடிமை" ஆகிய இரண்டு வார்த்தைகளை பயன்படுத்தினார் அவன் ஒரு இயேசுவின் அடிமையென எண்ணிக் கொண்டிருக்க - இனி தானல்ல, தனக்குள் இருக்கும் இயேசுவே எல்லாம் என்ற எண்ணத்துடனிருந்த - பவுலுக்கு உடன் வேலைக்காரன். அவர் இதற்கு ஒப்பாக இருந்த கொரிந்தியர்களை நினைவுபடுத்துகிறார் (1 கொரிந்தியர் 6:19). அவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, அவருடைய சபையின் அங்கத்தினர்களானவர்கள் (நடபடிகள் 20:28). எப்பாப்பிராவை பவுல் ஒரு இயேசுவின் அடிமையாக மாத்திரம் நினைக்காமல் தான் ஊழியஞ் செய்கிற அதே இயேசுவுக்கு ஊழியம் செய்யும் உடன் ஊழியக்காரனாகவும் பார்த்தார்.

இயேசு தமது உவமைகள் ஒன்றில் மார்க்க சம்பந்தமில்லாத ஒரு **உடன்** வேலைக்காரனைப் பற்றிக் குறிப்பிட்டார் (மத்தேயு 18:28-33). அப்பொழுது தமது இரண்டாம் வருகையைப் பற்றியும் சொன்னார் (மத்தேயு 24:44). இந்த வார்த்தைகள் பவுலின் எழுத்துக்களில் காணப்படும் ஒரே இடம், தீகிக்குவைக் குறித்துப் பேசுகிறது.

**"உங்களுக்காகக் கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரன்" (1:7)**

பவுல் எப்பாப்பிராவை **உண்மையான ஊழியக்காரன்** என்று விவரித்தார் "உண்மையான" (*pistos*) என்பது சாதாரண வழக்கில் தொடர்ந்து ஜனங்களுக்கானாலும் (மத்தேயு 24:45; 25:21; லூக்கா 12:42) அல்லது தேவனுக்கானாலும் சேவை புரியும் ஒருவரைக் குறிக்கிறது (1 கொரிந்தியர் 1:9). ஒருவருக்கு வேலை செய்தல் அல்லது ஊழியஞ்செய்தல் என்று குறிப்பிடும் போது, அது ஒரு ஒப்புக்கொடுத்த தன்மையை குறிக்கும் சொல். அது "பாத்திரமுள்ள" நம்பத் தகுந்தவராய் நடந்து கொள்ளுதலைக் குறிக்கவும் பயன்படும் சொல் (1 தீமோத்தேயு 1:15; 3:1). சில இடங்களில், தேவனுக்கு உண்மையுள்ளவர்களாயிருப்பதைக் குறிப்பிடும் போது, அது ஒரு கிறிஸ்தவனைக் குறிப்பதாக இருக்கும் (உதாரணமாக காண்க 1 தீமோத்தேயு 1:12).

"வேலைக்காரன்" எனும் பதம் "ஊழியக்காரன்" என்பதிலிருந்து வித்தியாசப்பட்ட வார்த்தையாக வசனம் 7ஆ வில் குறிப்பிடப்படுகிறது. "வேலைக்காரன்" என்பது இங்கே (*diakonos*) கீழ்ப்படிதலோடு சேவை

செய்யும் ஒரு நபரைக் குறிக்கிறது. பொதுவாக, மற்றவர்களுக்கு சேவை செய்கிற நபர்களைக் குறிக்க இது பயன்படுத்தப்படுகிறது (மத்தேயு 20:26; 23:11) - பணிவிடைக்காரன் (மத்தேயு 22:13; யோவான் 2:5), அரசாங்கம் (ரோமர் 13:4), தேவனுக்கு ஊழியம் செய்வோர் (2 கொரிந்தியர் 6:4), சாத்தானுக்கு ஊழியம் செய்வோர் (2 கொரிந்தியர் 11:15) மேலும் உதவிக்காரர்களாக பணிபுரிவோருக்கும் பயன்படுத்தப்படுகிறது (பிலிப்பியர் 1:2; 1 தீமோத்தேயு 3:8, 12). பவுல் அதே வார்த்தையை தனக்கும் பயன்படுத்தியிருப்பதால் (கொலோசெயர் 1:23), எப்பாப்பிரா ஒரு உதவிக்காரனாக பணியாற்றினான் என்ற முடிவுக்கு வரமுடியாது. இதற்கு ஒத்த மற்றொரு கிரேக்க வார்த்தையின் பொருள் கொண்ட பதம், *diakonia* ("ஊழியம்" என்று மொழிபெயர்க்கப்பட்டது), உதவிக்காரனுக்கு ஒருபோதும் பயன்படுத்தாத ஒரு பதம் (நடபடிகள் 1:17; 6:4; காண்க ரோமர் 12:7, இங்கு இதற்கு ஒத்த அமைப்புச் சொற்கள் "ஊழியஞ் செய்தல்" மற்றும் "ஊழியம்" என்று பயன்படுத்தப்பட்டுள்ளது).

எப்பாப்பிரா கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள ஒரு ஊழியக்காரனாக பவுலுக்கு ஆதரவாக உதவி செய்தான். பவுலுக்கு உதவிகரமாயிருந்து, அவர் பிரசங்கித்தவர்களுக்கு அவன் உதவி செய்யக்கூடியவனாகவுமிருந்தான்.

உங்கள் (நம்முடைய) எனும் கிரேக்க வார்த்தை (*hēmōn*) இந்தச் சொற்றொடரில் பயன்படுத்தப்படுகிற விதம் "உங்களுக்காக (நமக்காக என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகிறது) கிறிஸ்துவின் ஊழியக்காரன்" என்று சொல்லப்படுகிறது (NASB; NIV; NEB; TEV; ASV; RSV), மற்ற மொழிபெயர்ப்புகளில் *humōn* "உங்களுக்காக" என்று சொல்லப்படுகிறது (KJV; CEV). திருத்தப்பட்ட நான்காம் *கிரேக்க புதிய ஏற்பாட்டுப்பதிப்பு humōn* என்பது "உங்களுக்காக" என்பதை பரிந்துரைக்கிறது.[14] ஏனெனில் இதை சரியாக முடிவு செய்வதற்காக அதிகாரப் பூர்வமான பலமான ஆதாரமில்லாமையால், இரண்டுமே ஏற்புடையதே. இரண்டு மொழிபெயர்ப்புகளிலும் பொருள் வித்தியாசம் அப்படியொன்றும் பெரிதாக இல்லை. *Humōn* என்பதுதான் சரியான பொருளாக இருக்குமானால், பிறகு எப்பாப்பிரா சுவிசேஷத்தை பவுலுடன் பகிர்ந்து கொண்டு, பவுலின் ஊழியத்திலே உதவியாயிருந்து அவருடைய பிரசங்கத்தைக் கேட்பவர்களுக்கும் உதவியாயிருந்திருக்க வேண்டும். *Hēmōn* என்பது சரியாக இருக்குமாகில், பிறகு எப்பாப்பிரா பவுலின் முழு அனுமதியுடன் கொலோசெயருக்கு கிறிஸ்துவின் ஊழியக்காரனாக இருந்தான் என்று பவுல் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளலாம்.

எப்பாப்பிரா கொலோசெயருக்குப் போதித்த ஒரு செய்தியாளன். இந்த சகோதரனின் சத்தியத்தைக் குறித்த அறிவு பவுலால் போதிக்கப்பட்டதன் மூலம் வந்திருக்கக் கூடும் அல்லது நேரடியாக பரிசுத்த ஆவியினால் போதிக்கப்பட்டு பெற்றிருக்கலாம். பவுலின் கைகளை வைப்பதால் பரிசுத்தாவியின் (ஆவிக்குரிய) வரம் கொடுக்கப்பட்டிருக்கக் கூடும்.

கொலோசெயர்கள் மற்ற எல்லாரும் சத்தியத்தின் சுவிசேஷத்தைக் கற்றுக் கொண்டது போலவே **கற்றுக் கொண்டிருக்கக் கூடும்.** ஆரம்ப காலக்கட்டத்தில், பிரசங்கிப்பதாலும் போதிப்பதாலும் மட்டுமே பரவியது. அது எழுத்து வடிவத்தில் வந்த பிறகு, சத்தியத்தை வாசிப்பதன் மூலமும் கற்றுக் கொள்ளக் கூடியதாயிருந்தது (எபேசியர் 3:3-5).

*பரிசுத்த ஆவியானவரோ, தேவதூதர்களோ கொலோசெயருக்குப் பிரசங்கிக்கவில்லை (1 பேதுரு 1:10-12). பரிசுத்த ஆவியினால் இயேசு அப்போஸ்தலர்களுக்கும் புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளுக்கும் சத்தியத்தை வெளிப்படுத்தினார் (யோவான் 14:26). இயேசு கடைசி பந்தியை தமது அப்போஸ்தலருடன் பங்கேற்றுக் கொண்டிருக்கையில், பரிசுத்த ஆவியின் மூலமாக அவர்களுக்கு வெளிப்பாட்டை வாக்குத்தத்தம் செய்தார். அந்த நிகழ்ச்சியில் அவர் பேசினவைகளெல்லாம் அவர்களிடத்தில் குறிப்பாக சொன்னவைகள்: "நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" (யோவான் 14:25); "நீங்கள் ஆதிமுதல் என்னுடனே கூட இருந்தபடியால் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்" (15:27); "இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" என்று சொன்னார் (யோவான் 16:12).*

*அப்போஸ்தலர்களும் புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளும் சத்தியத்தை சேர்த்து வைத்திருக்கும் கலன்களாக இருந்தனர், அவைகளிலிருந்து போதகர்கள் தங்களுக்கு வேண்டிய தகவல்களைப் பெற்றுக்கொண்டனர். பவுல் தீமோத்தேயுவுக்குப் போதித்தவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கிற உண்மையானவர்களிடத்தில் போதிக்கும்படி கட்டளையிடப்பட்டான் (2 தீமோத்தேயு 2:2). அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் சபையின் அஸ்திபாரத்தில் இருந்தார்கள் (எபேசியர் 2:20) மற்றும் அவர்களே தேவனுடைய கட்டளைகளையும் எழுதினார்கள் (1 கொரிந்தியர் 14:37).*

*"எப்பாப்பிரா" என்பது எப்பாபிராத் தீத்துவுக்கு சுருக்கமாகச் சொல்லப்படுவது, இது இலத்தீன் பெயராகிய "வீனஸ்தஸ்" (அதன் பொருள் "அழகிய" அல்லது "வசீகரமிக்க") என்பதுடன் தொடர்புடையது. பவுலுடன் கூடப்பயணம் பண்ணின நெடிய பெயருடைய ஒருவன் - பிலிப்பிக்கு அனுப்பப்பட்ட சகோதரன் (பிலிப்பியர் 2:25; 4:18) இருந்தான். அந்த எப்பாபிரா தீத்துவுடன் இந்த எப்பாப்பிராவை குழப்பிக் கொள்ளக் கூடாது, ஏனெனில் பின்னதாகச் சொல்லப்படுகிறவன் கொலோசெ பட்டணத்தைச் சேர்ந்தவன். இந்த எப்பாப்பிரா தான் முதன்முறையாக சுவிசேஷத்தை கொலோசெ பட்டணத்துக்கு அநேகமாக கொண்டு சென்றிருக்க வேண்டும். கொலோசெயர் மற்றும் பிலேமோன் நிருபங்களை பவுல் எழுதினபோது அவன் ரோமில் பவுலுடன் இருந்தான். எப்பாப்பிரா மூலமாக பவுல் கொலோசெ, லவோதிக்கேயா மற்றும் ஹயராபோலீஸ் ஆகிய சபைகளின் நிலவரங்களைத் தெரிந்து கொண்டார். ஒருவகையில் பவுல் எபேசுப் பட்டணங்களில் சுவிசேஷ ஊழியம் செய்து கொண்டிருக்கையில் அவன் மேற் குறிப்பிட்ட பட்டணங்களில் பிரசங்கித்துக் கொண்டிருந்தான் (காண்க நடபடிகள் 19:10) அவன் ரோமாபுரிக்குப் போய் பவுலுடன் சபைகளின் நிலவரங்களைப் பகிர்ந்து கொள்ளவும் அவருடைய காவலில் துணையாக இருக்கும்படியாகவும், புறப்பட்டு போனதாகத் தெரிகிறது.*

*பவுல் எப்பாப்பிரா கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்த தன்மையையும் ஊழியத்தையும் மிக உயர்வாகக் கருதினார். அவர் அவனை, "கிறிஸ்துவினிமித்தம் என்னோடே கூட காவலில் வைக்கப்பட்டிருக்கிற எப்பாப்பிரா" என்று அழைத்தார் (பிலேமோன் 23), "எங்களுக்குப் பிரியமான*

*உடன் வேலையாள் உங்களுக்காகக் கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரன்" (கொலோசெயர் 1:7), என்றும் "இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரன்" என்றும் அழைக்கப்பட்டான் (கொலோசெயர் 4:12). "ஊழியக்காரன்" (கொத்தடிமை) என்னும் வார்த்தையை தன்னைத்தானே குறிப்பிட பவுல் அநேக முறை பயன்படுத்தியிருக்கிறார், இரண்டு முறை மற்றவர்களைக் குறிப்பிட்டு பேசியிருக்கிறார் - எப்பாப்பிரா (4:12) மற்றும் தீமோத்தேயு (பிலிப்பியர் 1:1).*

***"ஆவிக்குள்ளான உங்கள் அன்பையும் அவனே எங்களுக்குத் தெரியப்படுத்தினான்" (1:8)***

*கொலோசெயர்கள் எப்பாப்பிரா மூலமாக தேவனுடைய கிருபையை அறிந்து கொண்டிருந்தார்கள். அவன் அவர்களுக்குப் போதித்தது மாத்திரமல்ல, அவர்களைக் குறித்த நல் அறிக்கையையும் கொண்டு வந்தான். பவுலிடத்திலும் தீமோத்தேயுவிடத்திலும் கொடுத்த அறிக்கையில் கொலோசெயர்களின் அன்பையும் ஆவிக்குரிய அபிவிருத்தியையும் உட்படுத்தி கொடுக்கப்பட்டது. சில வசனங்களுக்கு முன்பாகத்தான் (1:4) பவுல் அவர்களை புகழ்ந்து சகல பரிசுத்தவான்களிடத்திலும் கொண்டுள்ள அன்பைக் குறிப்பிட்டார். இப்பொழுது தான் பெற்றத் தகவல் யாரிடமிருந்து வெளிப்பட்டது என்பதை - எப்பாப்பிரா மூலம் தெரிய வந்ததை தெரியப்படுத்துகிறார்.*

*கொலோசெயரின்* ***ஆவிக்குள்ளான அன்பு*** *குறித்து பவுல் குறிப்பிட்டது பரிசுத்த ஆவியைப் பற்றினதா? வசனம் 8ல் (ஆங்கிலத்தில்) "ஆவி" எனும் பதத்தை (pneuma) பெரிய எழுத்துகளில் பெரும்பாலான மொழிபெயர்ப்பாளர்கள் எழுதியுள்ளனர், இதன் பொருள் பவுல் பரிசுத்த ஆவியைக் குறிப்பிட்டார் என்றே அவர்கள் நம்புகிறார்கள். கொலோசெயர் 2:5ல், கிரேக்க மொழியில் முன்னிடைச் சொல்லாகிய* "the" *எனும் ஆங்கில வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது,[15] பவுலின் ஆவியைக் குறிப்பதாக நினைக்கப்படுகிறது. இந்த இரண்டு வசனங்களில் மட்டுமே கொலோசெயரில் pneuma எனும் வார்த்தை காணப்படுகிறது. வசனம் 8 பரிசுத்த ஆவியைப் பற்றிக் குறிப்பிடுவதில்லை எனில், பிறகு இந்த நிருபத்தில் பவுல் பரிசுத்த ஆவியைப் பற்றி பேசுவதே இல்லை.*

*பவுல் தனது நிருபங்களில் பரிசுத்த ஆவியைக் குறிப்பிடுகிற இடத்திலெல்லாம் கிரேக்க வசனத்தில் "பரிசுத்த" என்பதை "ஆவி" யுடன் சேர்த்தே குறிப்பிட்டுள்ளார் (ரோமர் 5:5; 9:2) அல்லது ஒரு முன்னிடைச் சொல்லுடன் "ஆவி" எனும் பதம் குறிப்பிடப்படுகிறது (ரோமர் 2:29; 8:26, 27; கலாத்தியர் 3:2; 5:22). ஆகிலும், முன்னிடைச் சொல்லை பயன்படுத்திப் பேசும்போது எப்போதும் ஒரே மாதிரி இருக்கவில்லை (ஒப்பீடுக எபேசியர் 3:5 மற்றும் 4:4); இதனிமித்தமே, முன்னிடைச்சொல் பயன்படுத்தாத இடங்களில் மொழிபெயர்ப்பாளர்கள் தான் சுயமுடிவை எடுக்க வேண்டும்,* William Hendriksen *கீழ்வரும் ஆய்வுக்கருத்தை தெரிவிக்கிறார்:*

> *(வசனம் 8ல்) எளிமையாக இது "ஆவிக்குரிய அன்பை மட்டுமே குறிப்பிடுகிறது" "பரிசுத்த ஆவியைக்" குறிப்பதில்லை என்று சிலர் சொன்ன போதிலும் சில வசனங்களில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் ரோமர் 15:30; கலாத்தியர் 5:22; மற்றும் எபேசியர் 3:16,*

*17 போன்ற வசனங்களின்படி அது மெய்ப்பிக்கிறதாய் கிறிஸ்தவ அன்பு உள்ளே வாசம் பண்ணும் ஆவியின் கனியாகக் குறிப்பிடப்படுகிறது.*[16]

வசனம் 8ல் பவுல் பரிசுத்த ஆவியைக் குறிப்பிட்டார் எனில், பிறகு கொலோசெயர்கள் பரிசுத்த ஆவியின் பண்போடுகூடிய ஒற்றுமையை ஆலோசிக்க வேண்டுமென்ற முடிவுக்கு வருகிறார். அவர்கள் அன்பு உட்பட ஆவியின் கனியைப் பெற்றிருந்தார்கள் (எபேசியர் 5:9).

கிரேக்க வசனப்பகுதியில் "ஆவி" என்பதற்கு முன் முன்னிடைச்சொல்காணப்படாததால், பவுல் ஒரு வேளை "ஆவியில்" (மனித சுபாவத்தில்) என்று பரிசுத்த ஆவி என்பதற்குப் பதிலாகக் குறிப்பிட்டிருக்கலாம். நன்கு அறியப்பட்ட பெரும்பாலான மொழிபெயர்ப்புகளில் "ஆவியில்" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றவர்கள் இந்தச் சொற்றொடரை "ஆவியில் அன்பு"[17] மற்றும் "உங்களுடைய ஆவிக்குரிய பாசம்"[18] என்று மொழிபெயர்த்துள்ளனர்.

"ஆவியில்" என்று பவுல் பொருள்படுத்தியிருந்தால், பிறகு அதன்பொருள் தொழுது கொள்ளுதலைக் குறித்த வசனப்பகுதியில் இயேசு யோவான் 4:23, 24, ல் குறிப்பிடுகிற "ஆவியோடும்" என்பதன் பயன்பாடு இதே போன்றதுதான். இந்த வசனப்பகுதிக்கு பெரும்பாலான மொழிபெயர்ப்பாளர்கள் "ஆவியில்" என்று கூறியுள்ளனர் (KJV; NASB; NIV; NKJV; NRSV; RSV) அப்படியானால் இதன் பொருள், அவர்களுடைய அன்பு ஏதோ வெளித்தோற்றமானதாக மட்டுமிராமல், மாறாக அது மனித சுபாவத்தின் ஆழத்திலிருந்து வருகிறதாயிருக்கிறது. அப்படிப்பட்ட செயல் அவர்களுடைய அன்பின் உண்மையை குறிப்பிடக் கூடியதாயிருக்கும்.

## பயன்பாடு

### ஸ்தோத்திர ஜெபம் (1:3-6)

நம்முடைய ஜெபங்கள் பெரும்பாலும் சுயநலமிக்கவைகளாக இயல்பாய் காணப்படுகிறது. தொடர்ந்து நாம் நமக்கு வேண்டிய ஆசீர் வாதங்களுக்காக வேண்டுதல் செய்கிறோமேயொழிய தேவனுக்கு ஸ்தோத்திரம் (நன்றி) செலுத்தவதோ பிறருக்காக ஜெபிப்பதோ இல்லை. இயேசுவின் ஜெபங்களெல்லாம் மிக அதிகமாக தமக்காக அன்றி பிறருக்காகவே அமைந்திருந்தது (லூக்கா 22:31, 32; யோவான் 17:6-26; லூக்கா 23:34). பவுல் தான் கொலோசெயருக்காக நன்றி செலுத்தி ஜெபம் பண்ணுவதை அவர்கள் அறிந்து கொள்ளச் செய்தார்.

*(1) அவர் அவர்களுடைய விசுவாசத்துக்கும் அன்புக்கும் நன்றியுள்ளவராயிருந்தார்.* கிறிஸ்தவ விசுவாசம் என்பது கண்மூடித்தனமான விசுவாசம் அல்ல, ஆனால் அது சாட்சியத்துடன் கூடிய அடிப்படையுள்ளது. இப்பிரபஞ்சம் முழுவதும் வடிவமைப்புப் பெற்ற சாட்சிய முண்டு, இப்படியாக வடிவமைத்தவரும் இருக்கிறார் (சங்கீதம் 19:1; ரோமர் 1:19, 20; எபிரெயர் 3:4). தேவன் இருக்கிறார் என்ற விசுவாசமில்லாமல் ஒருவர் தேவனைப் பிரியப்படுத்த இயலாது. இரட்சிப்பு விசுவாசத்தினாலும் கிருபையினாலும் வருகிறது (எபேசியர் 2:8, 9), ஏனெனில் விசுவாசத்தின் மூலம்

*கிருபைக்கான சிலாக்கியத்தைப் பெறுகிறோம் (ரோமர் 5:1, 2), அதாவது, தகுதியற்றவர்களாயிருந்த போதும் தேவனிடத்திலிருந்து பெறும் அளவற்ற தயவு.*

*இரட்சிக்கிற விசுவாசம் செயலற்ற ஒன்றல்ல; அது அன்பினால் கிரியை செய்கிறது (கலாத்தியர் 5:6), ஏனெனில் கிரியை இல்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது (யாக்கோபு 2:17, 26). விசுவாசம் வசனத்தின் மூலம் போஷிக்கப்பட்டு களையெடுக்கப்படுகிறது (ரோமர் 10:17). நமது விசுவாசத்தை நாம் விருத்தி செய்துகொள்ள, வசனத்தை நாம் தினசரி வாசித்து, பெரோயா பட்டணத்து கிறிஸ்தவர்களைப்போல ஆராயவேண்டும் (நடபடிகள் 17:10, 11). புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் பாலின்மேல் வாஞ்சையாயிருப்பது போல திருவசனத்தின் மேல் வாஞ்சையாயிருக்க வேண்டும் (1 பேதுரு 2:2), ஏனெனில் நாம் சரீரத்திற்குரிய உணவினால் மட்டும் வாழ்ந்திட இயலாது. நமக்கு ஆவிக்குரிய உணவாகிய தேவனுடைய வசனம் தேவை (மத்தேயு 4:4).*

*நம்முடைய விசுவாசத்தோடே கூட கிறிஸ்தவ ஒழுக்கங்களை கூட்ட வேண்டும்; இந்த ஒழுக்கங்களெல்லாம் கிரீடம் போல் இருப்பது அன்பு (2 பேதுரு 1:5-7). அன்பு நமக்குச் செய்கிற நற்காரியங்களினால் அது மிகப் பெரிய ஒரு ஒழுக்கமாகும் (யோவான் 14:15, 21, 23). கிறிஸ்தவ நன்னடத்தைகளை விருத்தி செய்வதற்கும் (1 கொரிந்தியர் 13:4-8), மற்றும் நம்முடைய சகோதரர்களையும் நம்முடைய அயலார்களையும், நம்முடைய சத்துருக்களையும் கூட ஒன்றிணைக்க அன்பு நம்மில் மன ஊக்கம் அளிக்கிறது.*

*கிறிஸ்தவர்கள் தேவனிடத்திலும் அன்பு காட்ட வேண்டும் (மத்தேயு 22:37). சக கிறிஸ்தவர்களிடத்திலும் (யோவான் 13:34), அயலார்களிடத்திலும் (மத்தேயு 22:39), சத்துருக்களிடத்திலும் (மத்தேயு 5:44) அந்த அன்பு காட்டப்பட வேண்டும். நாம் கிறிஸ்துவைப் பின்பற்றக் கூடியவர்கள் என்று அடையாளம் காட்டுகிற விதம் நம்முடைய கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் நிலையான அன்பைக் காட்ட வேண்டும் (யோவான் 13:35). இப்படிப்பட்ட அன்பு ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும்போது நாம் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்க வேண்டும்.*

*(2) அவர் அவர்களுடைய நம்பிக்கைக்காக நன்றியுள்ளவராயிருந்தார்.* நம்பிக்கை ஆத்துமாவின் நங்கூரமாய் இருக்கிறது (எபிரெயர் 6:19). ஒரு நங்கூரம் ஒரு கப்பலை பிடித்துக் கொண்டிருப்பது போல, நம்பிக்கை கிறிஸ்தவர்களை இயேசுவினிடமிருந்து வழுவிப் போகமலிருக்கச் செய்கிறது. எபிரெயருக்கு எழுதின எழுத்தாளர் தமது வாசகர்கள் தாங்கள் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு எச்சரித்தார் (எபிரெயர் 2:1-4).

பரலோகமே சகல கிறிஸ்தவர்களுக்கும் ஒரே நம்பிக்கை. புதிய பிறப்பு நமக்கு பரலோக ஆசீர்வாதங்களை கொடுக்கிறது (1 பேதுரு 1:3, 4). இது தேவனிடத்திலிருந்து வருகிற ஆசீர்வாதம், ஏனெனில் இயேசுவை உயிரோடு எழுப்பினதால் அவருடைய பெரிதான இரக்கம் விளங்கப் பண்ணப்பட்டது. இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலில் நாமும் பங்கேற்று ஞானஸ்நானம் பெறும்போது அவருடைய உயிர்த்தெழுதல் மூலமாக நமக்கு இரட்சிப்பு அருளப்படுகிறது (1 பேதுரு 3:21).

கிறிஸ்தவர்களாகிய நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள நம்பிக்கை என்னவென்றால் உயிர்த்தெழுதலுக்குப்பின் நாம் எல்லாரும் பரலோகத்தில்

ஒன்றாயிருப்போம் என்பதுதான். அப்பொழுது, நாம் மாற்றப்படுவோம் என்று நமக்கு வாக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது (1 கொரிந்தியர் 15:51, 52), கிறிஸ்துவின் ஆவிக்குரிய சாயலில் மறுரூபமடைவோம் (பிலிப்பியர் 3:21; 1 யோவான் 3:2). இந்த நம்பிக்கை நமது வாழ்வில் அழியாத தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

*(3) அவர்களுடைய கனிகொடுத்தலைக் குறித்தும் அவர் நன்றியறிதல் உள்ளவராயிருந்தார்.* கிறிஸ்தவர்கள் மற்றவர்களை இரட்சிப்புக்குள் கொண்டுவர உதவுவதற்காக இரட்சிக்கப்பட்டவர்கள். இயேசு இழந்து போனவர்களாகிய வயலை ஏறெடுத்துப் பார்த்து, நித்திய ஜீவனுக்கென்று ஆத்துமாக்களை அறுவடை செய்யச் சொன்னார் (யோவான் 4:35, 36). அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் என்று அவர் சொன்னார் (மத்தேயு 9:37).

சக கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய ரீதியில் வளரும் போதும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் மற்றவர்களைக் கொண்டு வரும்போதும் நாம் சந்தோஷப்பட்டு களிகூர வேண்டும். சகோதரர்களுக்குள்ளே பொறாமை எழும்பிவிடக் கூடாது. ஒரு அங்கத்தினர் ஏதோ ஒரு வகையில் மேன்மையடையும் போது, எல்லாரும் அவருடைய முன்னேற்றத்தில் சந்தோஷப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 12:26).

கொலோசெயிலிருந்த சபையில் சில பிரச்சனைகள் இருப்பதாக பவுலின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அவைகளிலே அவர் உழன்று கொண்டிருக்க வில்லை; மாறாக, சகோதரர்களிடத்தில் காணப்பட்ட விசுவாச வளர்ச்சி, அன்பு, நம்பிக்கை மற்றும் கனி கொடுத்ததைக் குறித்து அவர்களைப் புகழ்ந்தார்.

### மற்ற கிறிஸ்தவர்களுக்கான ஜெபம் (1:3-6)

ஏறத்தாழ எல்லா கிறிஸ்தவர்களும் மற்றவர்களுக்காக ஜெபிக்கும் போது, விசேஷமாக எவைகளை தங்களுடைய ஜெபங்களில் சேர்க்க வேண்டும் என்று நிச்சயமில்லாமல் இருக்கிறோம். ஒருவேளை வியாதிகளைக் குறித்தும் சுய தேவைகளைக் குறித்தும் மிக அதிகமாக அடிக்கடி விண்ணப்பங்கள் ஏறெடுக்கப் பட்டிருக்கக் கூடும். நாம் மற்றவர்களுக்காக ஜெபிக்கும் போது எவைகளையும் சேர்த்து தேவனிடத்தில் வேண்டிக் கொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு மனதால் அறியும் திறனை பவுலின் ஜெபங்கள் கொடுக்கின்றன.

பவுல் தான் அவர்களுக்காக ஜெபிப்பதை கொலோசெயர்கள் தெரிந்து கொள்ளச் செய்தார் (1:5). குறிப்பிட்ட ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக, தேவ பக்திக்குரிய தகுதியாம்ஸங்களில் வளர, மற்றும் தங்களின் சுய தேவைகள் சந்திக்கப்பட அவர் ஜெபித்தார். அனைத்து கிறிஸ்தவர்களும் அப்படியே செய்ய வேண்டும். கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கிற ஒரு சகோதரனுக்கு யாரோ ஒருவர் அவரை உற்சாகப்படுத்தும்படி, “தேவனிடத்தில் ஜெபிக்கும்போது, நான் உங்களுடைய விசுவாசத்துக்காகவும், அன்பிற்காகவும், பரலோகத்தில் உங்களுக்காக வைக்கப்பட்டுள்ள நம்பிக்கைக்காகவும், மற்றும் உங்களுடைய கனிகள் நிறைந்த ஜீவியத்திற்காகவும் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறேன்” என்று சொன்னால் அவர் பெறும் உற்சாகம் எவ்வளவாய் இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். அப்படிப்பட்ட உறுதிமொழிகள் ஒரு பந்தத்தை உருவாக்கும் மற்றும் அந்த சகோதரனுடைய ஆவியை உற்சாகப்படுத்தும்.

*செயல்படும் விசுவாசம் (1:3)*

"என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?" என்று இயேசு கேட்டார் (லூக்கா 6:46). அவரை ஆண்டவர் என்று உணர்ந்து கொண்டால் மட்டும் போதுமானதல்ல. ஒரு நபர் தான் உறுதியாய் நம்புகிறவரிடத்தில் அவரது கட்டளைக்கு கீழ்ப்படியும்படி விசுவாசம் அவரை வழிநடத்துகிறது.

*(1) விசுவாசத்தினால் தூண்டப்படும் கிரியை.* எபிரேயர் 11 செயல் தூண்டுதலை உண்டாக்கிய எண்ணிறைந்த விசுவாசக்கிரியைகளின் உதாரணங்களைக் கொடுக்கிறது: ஆபேல் ஏற்றுக்கொள்ளக் கூடிய பலியை செலுத்தினான் (வசனம் 4); நோவா ஒரு பேழையைக் கட்டினார் (வசனம் 7); ஆபிரகாம் தனது சொந்த தேசத்தை விட்டு தேவன் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்துக்குப் போனார் (வசனம் 8); இஸ்ரவேலர் எரிகோவைச் சுற்றி வந்தார்கள் (வசனம் 30); ராகாப் இஸ்ரவேலின் வேவுகாரர்களுக்கு உதவினால் (வசனம் 31). ஆபிரகாமின் கிரியையினாலே அவருடைய "விசுவாசம் பூரணப்பட்டது" (யாக்கோபு 2:22). அவர் கிரியை செய்கிற வரை, அவருடைய விசுவாசம் "பூரணப்படவில்லை," அல்லது முழுமைபெறவில்லை. விசுவாசம் ஒரு வல்லமையான செயலூக்கி, தேவனுடைய சித்தத்துக்கு நாம் கீழ்ப்படியும்படி செய்கிறது.

*(2) ஜீவிக்கும் விசுவாசத்திற்கு ஒரு அடையாளம் கிரியை.* கிரியையில்லாத விசுவாசம் செத்ததும் பயனற்றதுமாகும் என்று யாக்கோபு எழுதினார் (யாக்கோபு 2:17, 20, 24, 26). ஒரு நாய் செத்துப்போனாலும் நாய்தான்; ஆனால் அது செத்துப்போனாலும், அது கிரியை செய்யாது. விசுவாச விஷயத்திலும் இதுதான் உண்மை. அதிரடியான ஜீவிக்கும் விசுவாசத்தினால் செயல் கிரியைகள் சூழ்ந்து கொள்ளப்பட்டிருக்கும்.

*(3) தேவனுடைய செய்திக்கும் பொறுப்பேற்கும் கிரியை.* தேவன் மனித இருதயத்துக்குள் நேரடியாக ஏதோ ஒரு ஆத்தும பலத்தை உணரச் செய்யும் விதத்திலோ அல்லது பரிசுத்த ஆவியின் நேரடி கிரியை மூலமோ விசுவாசத்தைக் கொடுப்பதில்லை. தேவனுடைய செய்திக்கு சரியான முறையில் பொறுப்பேற்குதல் மூலம் விசுவாசம் வருகிறது என்று திருமறை போதிக்கிறது: "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17). விசுவாசத்தை உண்டாக்க தேவனுடைய வசனமே அவருடைய பங்காயிருக்கிறது. மனிதனுடைய பகுதியில் அவன் வசனத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசுவின் அற்புதங்களெல்லாம் எழுதப்பட்டிருப்பதன் நோக்கம் ஜனங்கள் அவைகளைக் கற்று இயேசுவை விசுவாசித்து நித்திய ஜீவனை அடைந்து கொள்ளும் படியாகத்தான் (யோவான் 20:30, 31). சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட பிறகே, சமாரியர்களும் கொரிந்தியர்களும் விசுவாசம் வைத்தார்கள் (நடபடிகள் 8:5, 12; 18:8). எபேசு பட்டணத்தில் கிறிஸ்தவர்களானவர்களும் கூட இப்படியாகத்தான் "... சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானார்கள்" (எபேசியர் 1:13).

*"மற்றவர்களுக்குப் போதித்தல்" (1:6)*

கொலோசெயர்கள் சத்தியத்தைக் கேட்டவுடன் மற்றவர்களுக்குப்

*போதிக்கத் துவங்கி விட்டனர். புதிதாய் மனமாற்றப்பட்டவர்கள் போதிக்கப்படவும், பயிற்சியளிக்கப்படவும், தங்களுடைய நண்பர்களுக்குப் போதிக்க உற்சாகப்படுத்தப்படுவதும் அவசியம்.*

*பவுல் தீமோத்தேயுக்கு, "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி" என்று எழுதினார் (2 தீமோத்தேயு 2:2). தகுதியான காலத்துக்குப் பின்பு, இயேசுவின் உபதேசங்களில் போதிய விருத்தியையும் வளர்ச்சியையும் பெற்று போதிக்கும் திராணியுள்ள விசுவாசமான கிறிஸ்தவர்கள் தேவனுடைய வசனத்தை செயலூக்கம் கொடுக்கும் போதகர்களாவார்கள்.*

*போதக சமர்த்துள்ளவர்கள் தங்கள் திராணியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். சகோதரர்களைப் பெலப்படுத்த ஏதுவான ஆரோக்கியமான போதகர்கள் சபைக்குத் தேவை (எபேசியர் 4:11, 12), மேலும் இயேசு கிறிஸ்து மூலம் இரட்சிப்பின் நற்செய்தியைப் பிரசங்கிக்கிற சுவிசேஷகர்கள் உலகிற்குத் தேவை (ரோமர் 10:14, 15); நாம் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் முன் மாதிரியைப் பின்பற்றி மற்றவர்களுக்குப் போதிக்கத் தக்கவர்களுக்குத் தொடர்ந்து போதிப்போமாக!*

---

*குறிப்புகள்*

[1]*ராபர்* G *பிரேட்சர் மற்றும் யூஜின்* A. *நிடா, கொலோசெயர் மற்றும் பிலேமோன் ஆகியோருக்கு பவுல் எழுதின நிருபங்களுக்கான மொழிபெயர்ப்பாளர்களின் கையேடு, மொழிபெயர்ப்பாளர்களுக்கு உதவிகரமாய் இருக்கிறது.* (New York: United Bible Societies, 1977), 8. [2]*காண்க ரோமர் 5:2-5; 1 கொரிந்தியர் 13:13; கலாத்தியர் 5:5, 6; எபேசியர் 4:2-5; 1 தெசலோனிக்கேயர் 1:3; 5:8; எபிரெயர் 6:10-12; 10:22-24; 1 பேதுரு 1:3-8, 21. பவுலால் தமது வாழ்த்துரையில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் "சுவிசேஷம்," "சத்தியம்," மற்றும் "கிருபை" (கொலோசெயர் 1:5ஆ, 6).* [3]J. B. Lightfoot, *St. Paul's Epistles to the Colossians and to Philemon,* rev. (London: Macmillan & Co., 1916), 130. [4]Herbert M. Carson, *The Epistles of Paul to the Colossians and Philemon: An Introduction and Commentary,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 30. [5]Lightfoot, 131. [6]E. K. Simpson and F. F. Bruce, *Commentary on the Epistles to the Ephesians and the Colossians,* The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957), 180. [7]A. T. Robertson, *A Grammar of the Greek New Testament in the Light of Historical Research* (Nashville: Broadman Press, 1934), 27. [8]R. C. Lucas, *The Message of Colossians and Philemon: Fullness and Freedom,* The Bible Speaks Today (Downers Grove, Ill.: InterVarsity Press, 1980), 29. [9]*ரோமர் 1:8; 1 கொரிந்தியர் 1:4; எபேசியர் 1:16, 17; பிலிப்பியர் 1:3; கொலோசெயர் 1:3; 1 தெசலோனிக்கேயர் 1:2; 2 தெசலோனிக்கேயர் 1:3; 2 தீமோத்தேயு 1:3; பிலேமோன் 4.* [10]*காண்க ரோமர் 1:10; 10:1; 2 கொரிந்தியர் 13:7, 9; எபேசியர் 1:16; பிலிப்பியர் 1:4, 9; பிலேமோன் 4; 1 தெசலோனிக்கேயர் 1:2; 2 தெசலோனிக்கேயர் 1:11; 2 தீமோத்தேயு 1:3.*

[11]Lightfoot, 133. [12]*நடபடிகள் 2:41; 4:4; 6:7; 8:14; 11:1; 12:24; 17:11; 19:20.* [13]Carson, 33. [14]*The Greek New Testament,* 4th rev. ed., ed. Barbara Aland, Kurt Aland, Johannes Karavidopoulos, Carlo M. Martini, and Bruce M. Metzger (Stuttgart: United Bible Societies,

1998). [15]The NASB translates Colossians 2:5 "in spirit," while the KJV says "in the spirit." [16]William Hendriksen, *Exposition of Colossians and Philemon,* New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1964), 54. [17]Alexander Campbell, George Campbell, James Macknight, and Philip Doddridge, *The Sacred Writings of the Apostles and Evangelists of Jesus Christ: Commonly Styled the New Testament* (Buffaloe, Va.: A. Campbell, 1826; reprint, Nashville: Gospel Advocate Co., 1974), 359; and J. B. Rotherham, *The Emphasized New Testament: A New Translation,* in *The Word, the Bible from 26 Translations,* ed. Curtis Vaughan (Gulfport, Miss.: Mathis Publishers, 1991), 2394. [18]Hugh J. Schonfield, *The Authentic New Testament* (New York: New American Library of World Literature, 1954), 331.